

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 கும்பம் நல்லோரை மாசித் திங்கள் 19ம் நாள் (03-03-2026 செவ்வாய்க்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



## அருள்மிகு சிவஞான வைரவர் சுவாமி திருக்கோயில்
## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(தை 28 ஆம் நாள் (11-02-2026) திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது.)

# யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை
# அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில் பெருஞ்சிவனிரவு வழிபாடுகள்

















# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




## அறத்துடன் சேர்ந்த கல்வி முறைமை இலங்கையில் உருவாகவேண்டும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

கல்வி,செல்வம், வீரம் என்ற மூன்றும் வேண்டி நாங்கள் ஒன்பானிரவு வழிபாடுகளை நிறைவாக செய்கின்றோம். ஆனால் கல்வியையும், வீரத்தையும், செல்வத்தையும் சேர்ப்பதற்காக மட்டும் பயன்படுத்துகிறார்களா என்று எண்ணத் தோன்றுகிறது. வாழ்க்கையின் எல்லா நோக்கங்களும் பொதுவாக செல்வம் நோக்கியதாக தான் பெரும்பாலும் இருக்கின்றது. தமிழ் மறைகள் கூறுவது போன்று அறவழி நின்று, பொருள் ஈட்டி, இன்பமாய் வாழ்ந்து, இறுதியில் முத்தி பெறுதலே, வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிமுறையாகும்.

மற்றும் மாணவப்பருவத்தில் விதைப்பவை பெரும்பாலும் சிறப்பான சமுதாயத்தினை கட்டியெழுப்பும் என்பது எமது அசையாத நம்பிக்கை. அது அறிவியல் கல்வியாக இருந்தாலும் சரி, ஆன்மீகக் கல்வியாக இருந்தாலும் சரி, அதனுடன் இணைந்த அறம் சார்ந்த கல்வியாக இருந்தாலும் சரி, இளமையிலே மற்றும் மாணவப் பருவத்திலே விதைக்கப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் கல்வித்திட்டங்கள் மீள் உருவாக்கம் செய்யப்பட வேண்டும். வெறுமனே மருத்துவரை உருவாக்கும் கல்வியோ, பொறியலாளரை, சட்ட வல்லுநரை, கணக்காளரை, ஆசிரியரை, அதிபரை, அரசாங்க அதிகாரிகளை மற்றும் நிர்வாக அதிகாரிகளை உருவாக்கும் கல்வி முறைமைகள் அறத்தினையும் (ஏசைவரந்), நெறிமுறைகள் (Ethics) உள்ளடக்கிய கல்வியாக மாற்றப்பட வேண்டும்.

எப்படி ஆங்கிலம் (English) மற்றும் பொதுச் சாதாரணப் பரீட்சை (Common General Test) போன்ற பாடங்கள் கட்டாயமாக உயர்தரத்தில் எடுக்கப்படவேண்டுமோ, அதுபோல் அறம் (Virtue) மற்றும் நெறிமுறைகள் (Ethics) உள்ளடக்கிய ஒரு பாடமும் கட்டாய பாடமாக்க கல்வி சார் அதிகாரிகள் சிந்திக்கவேண்டும். தற்போது புதிய அரசாங்கம் பாடத்திட்டங்களை மீளாய்வு செய்யும்போது இதனையும் உள்ளடக்க உரியவர்கள் ஆவண செய்தால் வளமான எதிர்காலத்தினை கட்டியெழுப்புவதற்கு நாங்கள் செய்யும் ஒரு இது முயற்சியாக இருக்கும்.

அறநெறிப் பாடசாலைகளின் தேவை பற்றி நாம் பலமுறை எழுதியிருக்கிறோம். ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் மாணவர்கள் பல வேறு விடயங்களில் ஈடுபடுவதால் இதற்கான நேரம் அவர்களுக்கு கிடைப்பதில்லை. இதனை பெற்றோர்கள் உணர்ந்து, தம் பிள்ளைகளை அறநெறிக் கல்வியில் ஈடுபடுத்த வேண்டும். அறம் அற்ற எந்த ஒரு வளர்ச்சியும் உயிரின் வளர்ச்சிக்கு உதவாது.

ஆகவே நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கு, மாணவர்களுக்கு அறவழியில் வாழ்வதற்கான வழிமுறைகளைச் சொல்லிக்கொடுத்து, மேலாக நாங்களும் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டி இனி வரும் சமுதாயத்தினை அறம் சார் சமுதாயமாக உருவாக்க பெற்றோர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், அதிபர்கள், அதிகாரிகள், அரசாங்கம் முன்வர வேண்டும் என்று தாழ்மையாக வேண்டி நிற்கின்றோம்.

**அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல - (குறள் 39)**

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(30-01-2026) – வவுனியா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பன்னாட்டு திருக்குறள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த, முனைவர் ஞானஜோதி அம்மையார் குழுவினர் தென்னாட்டில் வழிபாடு ஆற்றினார்கள்.

(01-02-2026) – தென்னாட்டின் அறுபத்து ஆறாவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299, சுறவம் நல்லோரை, தைத் திங்கள் 18 ஆம் நாள் நிறைமதி அன்று (01.02.2026 – ஞாயிற்றுக்கிழமை) தைப்பூச நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஐயா அவர்கள், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள், ஒசுத்திரேலியாவைச் சேர்ந்த வைத்தியக் கலாநிதி. தெய்வேந்திரம்பிள்ளை சிதம்பரகுமார் அவர்கள், பிரித்தானியாவைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் தம்பு அவர்கள் ஆகிய சிறப்பு விருந்தினர்களும் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் ஐயா அவர்கள், ஒசுத்திரேலியாவைச் சேர்ந்த வைத்தியக் கலாநிதி. தெய்வேந்திரம்பிள்ளை சிதம்பரகுமார் அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் அறுபத்து ஆறாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து, ஏனையோருக்கும் இதழ்கள் வழங்கப்பட்டு, அடியார்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

(11-02-2026) – சம்பூர் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமையப்பெற்ற மங்களநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பாக இடம்பெற்றது. இவ்வழிபாடுகளை செந்தமிழ் அர்ச்சகர் சிவத்திரு. அருளானத்தம் சனுசன் ஐயா அவர்கள் ஆற்றி வைத்தார். (11-02-2026) – தென்னாடு சிவமடத்தின் சிவப்பணிகளுக்கு முழுநேர அடியாராக செயற்படுவதற்கு, சிவத்திரு. திரு நீலகண்டன் அவர்கள் இணைந்து கொண்டுள்ளார். (11-02-2026) – தென்னாடு சிவனிரவு வழிபாடுகள் ஆற்றுவதற்காக தமிழ்நாட்டிலிருந்து கோவை குணசீலன் ஐயா அவர்கள் வருகை தந்திருந்தார்.

(13-02-2026) – வடமாகாணத்தில் மாணவர்களுக்கு சிவபத்தியை மேம்படுத்தும் பொருட்டு தென்னாடு சைவ மாணவர் சபையால் சிவனிரவு பூசைப் பொருட்கள் வழங்கல் இடம்பெற்றது. அன்றைய நாளில் பன்னிரண்டு பாடசாலைகளுக்கு சென்று திருக்கோயில் பணிகள் தொடர்பாக பாடசாலை சமூகத்தினரிடம் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(14-02-2026) – தைத் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (14-02-2026) – பெருஞ்சிவனிரவை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் இருபது அறநெறிப் பாடசாலைகளுக்கும் கிழக்குப் பல்கலைக்கழக இந்து மாணவர் ஒன்றியத்தின் சிவனிரவை முன்னிட்ட போட்டிகளுக்கும் பூசைக்கும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் சைவ மாணவர் சபையினால் நிதியுதவி செய்து சிவனிரவு செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

(15-02-2026) – தென்னாட்டில் பெருஞ்சிவனிரவு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. நான்கு சாமமும் நால்வகை திரவியங்களால் திருமஞ்சனத்துடன், நால்வகை இசை அர்ச்சனையுடன் சிறப்பாக இடம்பெற்றது. தென்னாடு சைவ மாணவர் சபையின் பாடசாலை திருக்கோயில்கள் மற்றும் சாவகச்சேரி வாரிவனேசர் திருக்கோயிலிலும் சிவனிரவு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. தென்னாடு பெருஞ்சிவனிரவு நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(25-02-2026) – தென்னாடு விடுதி மாணவர்களுடனான கலந்துரையாடல், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் முதல்வர் தலைமையில் இடம்பெற்றது. (01-03-2026) – மாசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# ஊர்காவற்றுறையில் வீடமைப்புத் திட்டத்திற்காக சிவகுரு ஆதீனத்தினால் 15 ஏக்கர் காணி அன்பளிப்பு



ஊர்காவற்றுறையில் காணியற்ற ஏழைக் குடும்பங்களின் நலன் கருதி, சிவகுரு ஆதீனம் 15 ஏக்கர் நிலத்தை அன்பளிப்பு செய்ய முன்வந்துள்ளது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த 02.02.2026 அன்று யாழ். அரசாங்க அதிபர் சிவத்திரு. மருதலிங்கம் பிரதீபன் மற்றும் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் ஆகியோருக்கிடையில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. ஆதீனத்தின் இந்த அறப்பணி இப்பகுதி மக்களின் நீண்டகால வீட்டுப் பிரச்சினைக்குச் சிறந்த தீர்வாக அமையும்.

இதன் போது கருத்து தெரிவித்த சிவகுரு ஆதீன நம்பிக்கை நிதியத்தினர், தங்களால் வழங்கவுள்ள 15 ஏக்கர் காணியில், 10 ஏக்கர் காணியில் காணியற்ற குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டத்திற்காக வழங்கவும், 05 ஏக்கரில் ஒரு ஏக்கர் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தேவைக்காக வழங்கவும், மிகுதி ஆதீனம் மற்றும் பொதுத் தேவைப் பயன்பாட்டிற்காக பயன்படுத்த விரும்புவதாகவும் தெரிவித்து, தொடர்ச்சியான சட்டரீதியான கையளிப்பு தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடுவதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு ஈழத்து ஆதீனங்கள் சமய வளர்ச்சியுடன் சமூக வளர்ச்சியிலும் ஈடுபாட்டுடன் செயற்படுவது போற்றுதலுக்குரியது. அந்த வகையில் தவத்திரு. வேலன் சுவாமிகள் அவர்களின் இப்பெரும் பணியைத் தென்னாடு சிவமடம் சார்பில் போற்றி வாழ்த்தி மகிழ்கிறோம். அவரது பணி சிறப்புடன் தொடர ஐம்பூதநாதர் துணைநின்று அருள்புரிவாராக.

திருச்சிற்றம்பலம்

# பெருஞ்சிவனிரவிற்கு இலங்கை சனாதிபதியின் வாழ்த்து!



இலங்கையின் தற்போதைய சனாதி பதியான மதிப்பிற்குரிய அநுர குமார திசாநாயக்க அவர்கள், பெருஞ்சிவனிரவைக் கொண்டாடும் இலங்கை வாழ் மற்றும் உலக வாழ் சைவத் தமிழ் மக்களின் நல்லெண்ணங்கள் நிறைவேறும் சிறப்பான நாளாக இச்சிவனிரவு அமைய வேண்டும், எனத் தனது உறுதிப்படுத்தப்பட்ட சமூக வலைதளப் பக்கத்தில் வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ளார்.

சனாதிபதி அவர்கள் விடுத்துள்ள அந்த வாழ்த்துச் செய்தியில், “மகா சிவராத்திரி என்பது சிவபெருமான் மற்றும் பார்வதி தேவி இருவரின் சங்கமத்தையும், சிவபெருமான் தனது தெய்வீக நடனமான தாண்டவத்தை நிகழ்த்துவதையும் நினைவுகூரும் விதமாக அமைந்துள்ளது. இது உலகம் மற்றும் வாழ்க்கையின் ‘இருளை வெல்வதை’ குறிக்கிறது. அனைத்து மனித உறவுகளையும் மதிக்கும், ஒழுக்கநெறியுள்ள மற்றும் கருணையுள்ள சமூகத்தை உருவாக்குவதில் இதுபோன்ற மத மற்றும் கலாசார நிகழ்வுகள் மிக முக்கியமானவை என்று நான் உறுதியாக நம்புகிறேன்” எனத் தனது முக்கிய கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். மேலும், அண்மைக்காலமாக நாங்கள் பல சவால்களைத் தாண்டி புதிய மறுமலர்ச்சியை நோக்கிப் பயணிக்கும் வேளையில், சிவராத்திரி ஒளியுடன் இதயங்களை ஒன்றிணைக்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இவ்வாறு சைவப் பெருமக்களின் பத்திச் சிறப்பையும், தொன்மையையும் உணர்ந்து, ஆன்மீக விழுமியங்களைச் சமுதாய முன்னேற்றத்தோடு இணைத்து மதிப்பிற்குரிய சனாதிபதி அவர்கள் வாழ்த்துச் செய்தியை வெளியிட்டிருந்தமைக்காக, எங்கள் தென்னாடு சிவமடம் சார்பில் அவருக்கு நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்

# சிவனடி சேர்ந்தார் சிவத்திரு. செல்லத்துரை விக்கினேஸ்வரன் அவர்கள்



மன்னார் திருக்கேதீச்சரத் திருவாசக மடத்தில் கடந்த 18 ஆண்டுகளுக்கும் மேலாக சிவத்தொண்டு புரிந்து வந்த சிவத்திரு. செல்லத்துரை விக்கினேஸ்வரன் (விக்கி ஐயா) அவர்கள், கடந்த 07.02.2026 அன்று சிவனடி சேர்ந்தார்.

திருக்கேதீச்சர நாதரின் திருவடிகளையே தஞ்சமெனக் கொண்டு வாழ்ந்த விக்கி ஐயா, கடந்த 18 வருடங்களாகத் திருவாசக மடத்தின் உடைமைகளைத் தனதுயிரெனப் பாதுகாத்து வந்தார். மடத்தின் வளாகத்தைப் பசுமைச் சோலையாக மாற்ற வேண்டும் என்ற நோக்கில் அவர் நட்டு வளர்த்த பயன்தரு மரங்கள், இன்றும் அடியவர்களுக்கு நிழலையும் அமைதியையும் வழங்கி வருகின்றன. மடத்தில் நடைபெறும் 'திருவமுது' சேவையின் போது, வயது முதிர்வையும் பொருட்படுத்தாது அவர் வழங்கிய சரீர ஒத்துழைப்பும், அடியவர்களை வரவேற்று உபசரித்த பாங்கும் அனைவரதும் மனங்களில் நீங்கா இடம் பிடித்துள்ளன.

அமைதியும் அடக்கமும் நிறைந்த ஒரு சிறந்த சிவனடியாராகத் திருவாசக மடத்திலேயே வாழ்ந்து மறைந்த விக்கி ஐயாவின் பிரிவு, அம்மடத்திற்குப் பேரிழப்பாகும். நீத்தாரது உயிர், அன்னை கௌரி அம்மை உடனுறை திருக்கேதீச்சர நாதரின் திருவடி நிழலில் நிலைத்த பேரின்பத்தைப் பெற வேண்டுமென ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் மற்றும் திருவாசக மடம் ஆகியோர்களுடன் இணைந்து தென்னாடு சிவமடம் சார்பிலும் விண்ணப்பம் வைத்து வேண்டுகி றோம்.

திருச்சிற்றம்பலம்

# திருவாவடுதுறை ஆதீன இலங்கை யாழ்ப்பாண சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவாவடுதுறை ஆதீனத்தின் 24-ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளின் திருவருளாணையின் வண்ணம், இலங்கையில் சைவச் சித்தாந்தப் பயிர் தழைக்க ஒரு புதிய நன்முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்தின் நேரடி வழிகாட்டலில், இலங்கைச் சைவநெறிக் கழகத்தின் ஏற்பாட்டுப் பொறுப்பில் "யாழ்ப்பாணச் சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்" எதிர்வரும் 07-03-2026 சனிக்கிழமை முதல் தனது பணிகளைத் தொடங்கவுள்ளது.




நல்லூர், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ்ப்பாணப் பணிமனையில் நடைபெறவுள்ள இக்கற்கை நெறியானது, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முதன்மை அனுசரணையுடனும், இலங்கை சைவசமயப் பேரவையின் துணை அனுசரணையுடனும் முன்னெடுக்கப்படுகிறது. ஓராண்டுக் கற்கை நெறியாக அமையும் இப்பயிற்சியானது, வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும். கற்கை நெறியின் நிறைவில் தகுதியுள்ள மாணவர்களுக்குத் திருவாவடுதுறை ஆதீனத்தின் உயர் விருதான **"சித்தாந்த ரத்தினம்"** சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படும்.

இப்பயிற்சி நெறிக்கான தேநீர் மற்றும் மதிய உணவு என்பன வழங்கப்படுவதுடன், முழுமையாக இலவசமாகக் கற்பிக்கப்படுவது இதன் சிறப்பம்சமாகும். இதில் இணைய விரும்புவோர், சைவப் புலவர் செ.உதயகௌரியார் (0766251585) அல்லது அகோர சிவம் உமையரசு சிவாசாரியார் (0783083006) ஆகியோரைத் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரும் 28-02-2026-ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலதிக விபரங்களுக்குச் சைவத்திரு. சி.வினோதரூபனார் (0776427135) அவர்களைத் தொடர்புகொள்ளுமாறு இலங்கைச் சைவநெறிக் கழகத்தின் பொதுச் செயலாளர் சைவத்திரு. வி. துலாஞ்சனன் தெரிவித்துள்ளார்.

திருச்சிற்றம்பலம்

# தருமபுர ஆதீனமும் சைவபரிபாலன சபையும் இணைந்து நடாத்தும் சைவசித்தாந்தப் பட்டப்படிப்புகள் கற்கைநெறி




தமிழகத்தின் தொன்மைமிகு சைவத் திருவருள் நிறுவனமான திருக்கையிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனத்தின் 27 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவருளாணையின் வண்ணம், இலங்கையில் சைவசித் தாந்தப் பட்டப்படிப்புகள் எதிர்வரும் 2026 பங்குனி மாதம் 29 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன. தருமபுர ஆதீன அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனமும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையும் இணைந்து நடாத்தும் இக்கற்கை நெறிகள் ஈழத்துச் சைவப் பெருமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

இவ்வுயர்கல்வித் திட்டத்தின் கீழ் 'சைவசித்தாந்தப் புலவர்' மற்றும் 'சைவசித்தாந்த கலாநிதி' ஆகிய இரு பெரும் பட்டப்படிப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழகத்தில் சிறப்பாக நடைபெற்று வரும் இக்கற்கை நெறிகளைப் புலம்பெயர் நாடுகளுக்கும் விரிவுபடுத்தும் குருமகா சந்நிதானத்தின் உயரிய சிந்தனைக்கமைய, இலங்கையின் ஒருங்கிணைப்பாளராகச் சைவப்புலவர் சிவத்திருமதி சி.ராஜ்குமார் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கற்கை நெறிகளுக்கான வகுப்புகள் யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள சைவபரிபாலன சபையில் நேரடி வகுப்புகளாகவும், ஏனையோருக்காக இணையவழி (Online) வகுப்புகளாகவும் நடைபெறவுள்ளன.

இப்பட்டப்படிப்பில் இணைவதற்குச் சைவசித்தாந்தம் சார்ந்த அடிப்படைத் தகுதிகள் அவசியமாகும். விண்ணப்பிக்க விரும்புவோர் வரும் 10-03-2026 ஆம் தேதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைச் சைவபரிபாலன சபைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். ஆண்டுக்கான கட்டணமாக ஐயாயிரம் (5,000.00) ரூபா தீர்மானிக்கப்பட்டுள்ளது. பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், சைவ சமய வரலாறு மற்றும் இலக்கியங்களை ஆழமாகக் கற்றுத் தேற விரும்புவோருக்கு இதுவொரு அரிய வாய்ப்பாகும். மேலதிக விபரங்களுக்கு 0771046674 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் அவர்கள் அறிவித்துள்ளார்.

**திருச்சிற்றம்பலம்**

# திருக்கயிலாய பரம்பரை சூரியனார்கோயில் ஆதீனத்தின் முப்பதாவது குருமகா சந்நிதானங்கள் பீடம் ஏற்றல் நிகழ்வு



சைவத் திருநெறியைப் போற்றி வளர்க்கும் திருக்கயிலாய பரம்பரை சீர் கந்த பரம்பரை வாமதேவ சந்தானம் சூரியனார்கோயில் ஆதீனத்தின் முப்பதாவது குருமகா சந்நிதானமாக, சீர்வளர்சீர் சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் பீடம் ஏற்றல் செய்விக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க விழா கடந்த 12.02.2026 வியாழக்கிழமை அன்று சூரியனார்கோயில் சிவாக்கிரயோகிகள் ஆதீனத் திருமடத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது.

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவாவடுதுறை ஆதீனத்தின் 24 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், தமது ஆதீனத் திருக்கூட்டத் தம்பிரானாகிய சீர்வளசீர் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளை, சூரியனார்கோயில் ஆதீனத்தின் 30 ஆவது குருமகா சந்நிதானமாகத் திருவுள்ளம் பற்றித் தெரிவு செய்தார்கள். அன்று காலை நடைபெற்ற நல் நிகழ்வில், அவருக்குச் **"சீர்வளர்சீர் சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள்"** எனும் திருப்பெயரைச் சூட்டி, முறைப்படி பீடம் ஏற்றல் செய்வித்தருளினார்கள்.

முன்னதாக, காலை 8:05 மணிக்குத் திருமுறை விண்ணப்பத்துடன் விழா ஆரம்பமானது. தொடர்ந்து ஆதீனக் குருமுதல்வர் சீர்வளர்சீர் சிவாக்கிர யோகிகளுக்குச் சிறப்புத் திருமஞ்சனமும் வழிபாடுகளும் நடைபெற்றன. மதியம் மாகேசுவர பூசையும் அன்னம்பாலிப்பும் இடம்பெற்றன. மாலை வேளையில் ஓதுவார் மூர்த்திகளின் திருமுறை விண்ணப்பத்தைத் தொடர்ந்து, "வீழி சிவாக்கிரயோகிகள் நூல்களில் சித்தாந்த வளம்" மற்றும் "திருமங்கலக்குடி பதிகங்கள்" எனும் தலைப்புகளில் அறிஞர்களின் ஆன்மீகச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் பல்வேறு சைவ ஆதீனங்கள், அடியார் பெருமக்கள் மற்றும் சுற்றுவட்டாரக் கிராமவாசிகள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டு குருவருள் பெற்றனர்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

# தைப்பூசம் சிவதத்துவத்தின் பேரொளி



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

காவடியின் உடல் அமைப்பும் இந்தத் தத்துவத்தைச் சுட்டுகிறது. இருபுறமும் தொங்கும் பானைகள் உயிரின் இருமைத் தன்மையை, ஆசை மற்றும் வெறுப்பு, இச்சை மற்றும் பயம் குறிக்கின்றன. நடுவிலுள்ள தண்டு, இந்த இருமைகளைத் தாண்டிய நடுநிலை உணர்வைச் சுட்டுகிறது. இந்த உருவக அமைப்பு திருமந்திரத்தில் கூறப்படும் இடம், வலம் சத்திகள் மற்றும் அவற்றைத் தாண்டிய மைய நிலை என்ற கருத்துகளுடன் ஒத்திசைகிறது. இவ்வாறு காவடி ஒரு சடங்காக மட்டுமல்ல் உடலின் வழியாக சைவ தத்துவத்தை அனுபவிக்கச் செய்யும் ஒரு வரைபடமாகவும் செயல்படுகிறது.

தைப்பூசத்தில் காணப்படும் சில உடல் துளைச் செயல்கள் வெளிப்புறப் பார்வையில் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதுண்டு. ஆனால் சைவ ஆகம சித்தாந்த மரபில், இவை சுய தண்டனையாக அல்ல் உடலை ஆன்மாவுக்குக் கீழ்ப்படுத்தும் பயிற்சியாகவே விளக்கப்படுகின்றன. சிவஞானசித்தியார், உடல் ஒரு கருவி மட்டுமே என்றும், அது இலக்கு அல்ல என்றும் கூறுகிறது. இந்தக் கருத்தின் அடிப்படையில் தான் உடல் சார்ந்த இத்தகைய நடைமுறைகள் தத்துவப் பொருள் பெறுகின்றன. நாக்கு, கன்னம் போன்ற இடங்களில் செய்யப்படும் துளைகள் வாக்கு கட்டுப்பாட்டின் சின்னங்களாகவும் வாசிக்கப்படுகின்றன. சைவ மரபில் வாக்கு மிகச் சத்திவாய்ந்த கருவி தவறான வாக்கு கர்மத்தைப் பெருக்கும், கட்டுப்படுத்தப்பட்ட வாக்கு ஞானத்தை வளர்க்கும். மௌனத்துடன் கூடிய இத்தகைய நடைமுறைகள், வாக்குத் தவத்தின் தீவிர வெளிப்பாடாகவே புரிந்துகொள்ளப்படுகின்றன.



சைவத்திரு.சி. பிரியதர்சன்
பிரதிச்செயலாளர்
இலங்கைச்
சைவநெறிக் கழகம்


இவ்வாறு தைப்பூசத்தைச் சுற்றிய ஒழுக்கங்கள் அனைத்தும் ஒன்றாகப் பார்க்கப்படும்போது, தைப்பூசம் ஒரு வெளிப்புறச் சடங்குகளின் தொகுப்பாக அல்ல் சிவ ஞானம் செயலில் இறங்கிய பின், அந்த ஞானம் உயிரில் நிலைபெறுவதற்கான முழுமையான சைவ ஆன்மீகப் பயிற்சி நிலையாக அமைகிறது. இங்கு முருகன் வழிபாடு இலக்காக அல்ல் வழியாகவே செயல்படுகிறார். தவம், அனுபவ சுத்தி, கர்ம உணர்வு ஆகியவை அனைத்தும் ஒரே நோக்கைச் சுட்டுகின்றன: உயிரின் பாசப் பிடியை மெதுவாகத் தளரச் செய்து, ஞானம் நிலைபெறக் கூடிய நிலையை உருவாக்குதல்.

சைவ சமய வரலாற்றில் இந்த ஆன்மீகப் பயிற்சி நிலை சமூக நினைவகமாகப் பதியப்பட்ட விதத்தை இலக்கியமும் புராணமும் இணைந்து வெளிப்படுத்துகின்றன. சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படையில் முருகன், போர்தெய்வமாக மட்டும் அல்லாது, ஞானமும் அறமும் செயலில் வெளிப்படும் வடிவமாகச் சுருக்கமாகக் காட்டப்படுவது, முருகனை ஞானச் செயற்பாடாகப் பார்க்கும் சைவப் பார்வை பழமையானது என்பதைச் சுட்டுகிறது. இதன் தத்துவ விரிவாக்கமாக கந்தபுராணத்தில் வரும் தாரகாசூரன் சம்பவம் அமைகிறது. தாரகாசூரன் இங்கு வரலாற்றுப்



பாத்திரமாக அல்ல் உயிரை **“நான்”** என்ற மாய மையத்தில் கட்டிப்பிடிக்கும் ஆணவ அஞ்ஞான சத்தியின் உருவகமாக வர்ணிக்கப்படுகிறான்.

தேவர்கள் சிவனைச் சரணடைவது, பாசத்தின் பிடியில் சிக்கிய உயிர் பதி எனப்படும் சிவனை நோக்கித் திரும்பும் தத்துவச் செயலைக் குறிக்கிறது. சிவன் தாரகாசூரனை நேரடியாக அழிப்பதில்லை மாறாக, தனது ஞானத்தைச் செயலில் இறக்கி, முருகன் வழியாக அஞ்ஞானத்தை அறுக்கும் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறான்.



**‘நெய்ப்பூசு மொண் புழுக்கல்’ நேரிழையார் கொண்டாடும்**
**‘தைப்பூசம்’ காணாதே போதியோ பூம்பாவாய்**

இந்தச் செயல் வேல் வழங்கப்பட்ட நிகழ்வாகப் புராண மொழியில் வடிவம் பெறுகிறது. இங்கு புராணம் வரலாற்றுக் குறிப்பாக அல்ல் ஞானம் அஞ்ஞானத்தை அறுக்கும் சைவத் தத்துவ உண்மையை சமூக அனுபவத்திற்கு அணுகத்தக்க மொழியாக மாற்றும் கருவியாகச் செயல்படுகிறது.

இதன் அடிப்படையில் தைப்பூசம் ஒரு **“நினைவு நாள்”** அல்ல் உயிரின் ஆன்மீகப் பயணத்தில் ஒரு **“மாற்ற நிலை”**. பதி – பசு – பாசம் என்ற சைவ சித்தாந்தக் கட்டமைப்பில், பாசத்தின் பிடி தளரத் தொடங்கும் காலச் சின்னமே தைப்பூசம். அந்தத் தளர்ச்சி அருளின் செயல்பாட்டினால் நிகழ்கிறது அந்த அருள் காலம், தகுதி, அனுபவம் ஆகியவற்றின் சங்கமத்தில் செயலில் இறங்குகிறது. தைப்பூசம் அந்தச் சங்கமத்தைச் சுட்டும் பெயர்.

எனவே தைப்பூசத்தை ஒரு சமூக நிகழ்வாகவோ, ஒரு வழிபாட்டு நாளாகவோ மட்டுமே வாசிப்பது அதன் தத்துவ மையத்தை இழக்கும். தைப்பூசம் சைவ சமயத்தில் காலாதீதமான பரம்பொருள் காலத்தின் வழியாக ஞானத்தைச் செயல்படுத்தி, உயிரை அதன் உண்மை நிலைக்கு அழைக்கும் தருணத்தின் அடையாளம். இந்த அர்த்தத்தில் தைப்பூசம் உண்மையில் **“சிவதத்துவத்தின் பேரொளி”** ஆக விளங்குகிறது: அது வெளிப்புற ஒளிர்வு அல்ல; உயிரின் பாசப் பிடியை மாற்றும் ஞானச் செயல்.

**(முற்றும்)**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



# இரவிலும் மணியோசைகள் கேட்கட்டும்!

ஈழத்துத் திருநாட்டின் ஆன்மீகப் பாரம்பரியம் என்பது வெறும் சடங்குகளால் ஆனது மட்டுமல்ல. அது எமது மண்ணின் வாழ்வியலோடும், வரலாற்றுச் சூழலோடும் பின்னிப் பிணைந்தது. ஒரு காலத்தில் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று வாழ்ந்த எமது முன்னோர்கள், ஆலயங்களை வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் பார்க்கவில்லை் அவற்றை ஊரின் பாதுகாப்பு அரணாகவும், வாழ்வியல் ஆற்றல் மையங்களாகவும் கருதிப் போற்றினர். ஆனால், முப்பதாண்டு கால போர் எமது சமூகக் கட்டமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது போல, எமது தொன்மையான ஆலய வழிபாட்டு முறைகளிலும் பாரிய சிதைவுகளை உண்டாக்கியிருந்தது. அதில் மிக முக்கியமானது, இரவு நேரப் பாதுகாப்பு கெடுபிடிகளால் கைவிடப்பட்ட 'அர்த்தசாமப் பூசை' எனும் ஆறாம் கால வழிபாடாகும்.

போர் நிறைவடைந்து ஒன்றரை தசாப்தங்களைக் கடந்துவிட்ட இன்றைய சூழலில், வடக்கு – கிழக்கு எங்கும் எமது ஆன்மீகத் தளங்கள் மீண்டும் தழைத்தோங்கத் தொடங்கியுள்ளன. சிதைந்த கோபுரங்கள் நிமிர்ந்து நிற்கின்றன, வர்ணங்கள் பூசப்பட்ட விமானங்கள் மிளிர்கின்றன, வீதிகள் சீரமைக்கப்பட்டு, இரவு நேரப் போக்குவரத்துகள் சுமூகமாகியுள்ளன. இத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தும், ஏன் இன்னும் பெரும்பாலான எமது ஆலயங்களில் அர்த்தசாமப் பூசைகள் முறையாக ஆரம்பிக்கப்படவில்லை என்பது சிந்திக்கத்தக்க ஒரு வினாவாகும்.

'அர்த்தம்' என்றால் பாதி, 'சாமம்' என்றால் இரவுப்பொழுது. சைவ ஆகமங்களின்படி, ஒரு முழுமையான வழிபாட்டுப் பலனைப் பெறுவதற்கு ஆறுகாலப் பூசைகளும் தடையின்றி நடைபெற வேண்டும். அண்டத்தின் அனைத்துச் சத்திகளும் ஒடுங்கி, சிவமும் சத்தியும் ஏகமாகி ஒடுங்கும் உன்னதமான நேரமே அர்த்தசாமம். 'பள்ளியறைப் பூசை' என்று அழைக்கப்படும் இந்த நிறைவு கால வழிபாடே, ஒரு நாளின் வழிபாட்டைப் பூர்த்தி செய்கிறது. அன்று ஈழத்தில் நள்ளிரவு வரை ஆலயங்கள் திறந்திருந்தன! அந்த அமைதியான வேளையில் ஒலிக்கும் மணி ஓசை, ஊரெங்கும் ஒரு தெய்வீகப் பாதுகாப்பை உணர்த்திக் கொண்டிருந்தது.

இன்று பெரிய ஆலயங்கள் கூட மாலை ஏழு மணி மணிக்கெல்லாம் மூடப்படும் ஒரு 'அவசரக் கோலத்தைக்' கொண்டிருக்கின்றன. போர் முடிந்துவிட்ட போதிலும், அந்தப் போர்க்கால மனநிலை இன்னும் நிர்வாக சபைகளை விட்டு அகலவில்லை என்பதையே இது காட்டுகிறது. இன்று வேலை நிமித்தமாகவும், கல்வி நிமித்தமாகவும் பகல் பொழுதில் ஆலயத்திற்குச் செல்ல முடியாத இளைய தலைமுறையினருக்கு, அமைதியான இரவு நேர வழிபாடே அவர்களின் ஆன்மீகத் தேடலுக்கான உகந்த களமாக அமையும். ஆனால் நாம் ஏழு மணிக்கே கதவுகளைச் மூடி, அவர்களை ஆன்மீகத்திலிருந்து தூரப்படுத்து கிறோம்.

ஈழத்துத் தமிழ் சூழலில், போர்க்கால இடப்பெயர்வுகள் எமது பண்பாட்டுத் தொடர்ச்சியில் ஒரு பாரிய இடைவெளியை ஏற்படுத்தின என்பது கசப்பான உண்மை. அன்று எறிகணை வீச்சுகளுக்கும், தேடுதல் வேட்டைகளுக்கும், ஊரடங்குச் சட்டங்களுக்கும் அஞ்சி அவசர அவசரமாக அந்திப் பொழுதிலேயே ஆலயங்களைச் மூடிவிட்டு வீடுகளுக்குள் முடங்கிய காலம் மலையேறிவிட்டது. இன்று வீதிகள் ஒளியூட்டப்பட்டு, மக்கள் அச்சமின்றி நடமாடும் சூழலில், ஆலயங்கள் மட்டும் ஏன் இன்னும் அந்தப் பழைய 'அச்ச மன நிலையிலேயே' முடங்கிக் கிடக்க வேண்டும்? வழிபாட்டு நேரங்களைச் சுருக்குவது என்பது காலப்போக்கில் எமது ஆகம மரபுகளைச் சிதைத்துவிடும் அபாயம் கொண்டது. இழந்த ஆன்மீக உரிமைகளை மீளப்பெறுவது என்பது வெறும் சடங்கல்ல, அது எமது இருப்பையும் அடையாளத்தையும் முழுமையாக மீட்டெடுக்கும் செயலாகும்!

**திருச்சிற்றம்பலம்**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பன்னாட்டு சைவசித்தாந்த ஆய்வு மாநாடு - 2026



ஈழத்துச் சைவ வரலாற்றில் ஒரு பொற்காலப் பதிவாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சைவசித்தாந்தத் துறையும், உயர்பட்டப் படிப்புகள் பீடமும் இணைந்து நடத்திய முதலாவது பன்னாட்டு சைவசித்தாந்த ஆய்வு மாநாடு - 2026, கடந்த மாசித் திங்கள் 15 ஆம் நாள் (27-02-2026) வெள்ளிக்கிழமை அன்று, 09.00 மணியளவில் பல்கலைக்கழகக் கூவர் கலையரங்கில் மிகச் சிறப்பாக ஆரம்பமானது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி மூத்த பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.


மங்கள விளக்கேற்றல், நந்திக்கொடியேற்றல் மற்றும் பத்திமிகு திருமுறைப் பாராயணத்துடன் மாநாடு இனிதே தொடங்கியது. தொடக்க நிகழ்வில், சென்னைப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறைத் தலைவர் பேராசிரியர் நல்லூர் சா.சரவணன் அவர்கள் இணைய வழியாகக் கலந்துகொண்டு ஆற்றிய **'ஆதார சுருதி'** உரை, ஆய்வாளர்களுக்குப் பெரும் வழிகாட்டியாக அமைந்தது. மாநாட்டின் சிகர நிகழ்வாக, பன்னாட்டு ஆய்வாளர்களின் அரிய கட்டுரைகள் அடங்கிய **'ஆய்வரங்கக் கட்டுரைக் கோவை'** நூலினைத் துணைவேந்தர் வெளியிட்டு வைக்க, அதன் முதற்பிரதியைச் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மாநாட்டின் மற்றுமொரு சிறப்பம்சமாக, சமகாலத்தில் சைவசித்தாந்தப் பணிகளில் தங்களை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தி வரும் இளம் ஆளுமைகளை ஊக்குவிக்கும் வகையில் **'ஞானப்பிரகாசம் விருது'** வழங்கி கௌரவிக்கப் பட்டது. அந்த வகையில், கலாநிதி ஏரம்பமூர்த்தி அனுசாந்தன், அகில இலங்கை சைவமகா சபையின் பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி ப. நந்தகுமார் மற்றும் மருத்துவர் கி. பிரதாபன் ஆகியோருக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டன. இளைய தலைமுறையினர் சைவப் பணியில் தடம் பதிப் பதற்கான அங்கீகாரமாக அமைந்த இந்நிகழ்வு அமைந் திருந்தது.

ஈழத்துச் சைவச் செழுமையையும் சித்தாந்தத் தெளிவை யும் உலகளாவிய தளத்திற்குக் கொண்டு செல்லும் இம்முயற்சி யானது, எதிர்கால ஆய்வு மாணவர்களுக்கும் சிவனடி யார்களுக்கும் ஒரு கலங்கரை விளக்கமாக அமையும் என்பதில் ஐயமில்லை. பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முறையாக இத்தகைய பாரிய ஆய்வு மாநாடு முன்னெடுக்கப்பட்டமை சைவப் பெருமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**திருச்சிற்றம்பலம்**

# சிவபுராண விளக்க உரை



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**"பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்"**

நினது பெரிய புகழினைத் தீவினையையுடையேனாகிய யான் புகழும் முறையும் உபாயமுமாகிய ஒன்றும் அறியாதவனாக இருக்கின்றேன் என்றவாறு.

**பெருஞ்சீர்:-** மெய்ம்மையான புகழ். பொருள்சேர் புகழ் என்றும் சொல்லப்படும்.

**பொல்லா வினையேன்:-** இவர் செய்த நல்வினை திருவடிக்கண் இடையறாப் பேரன்பையும், சிவப்பணி செய்யும் சிந்தையையும் அளித்திருக்கவும், சிவனருளைப் பெற வாய்ப்பாக விளங்கவும் பொல்லா வினையேன் எனப் பொதுமையிற் கூறியது. கண்ட திருவடியும் குருமேனியையும் எப்போதும் காணக் கொடுத்து வைக்காத தீவினை பெரிதாகத் தோன்ற அதனைக் குறித்துக் கூறியவாறாம். புகழுமாறு ஒன்றறியேன் என்றது நீ **"விளம்புமா விளம்பே"** என்றாற்போல, அடியேன் உம்மைப் புகழும் உபாயத்தையும் தேவரீரே அருள வேண்டும் என்பதாம்.

பொல்லா வினைக்கு, கேவல நிலையில் மலவசமாய் கிடந்தும் பின் மனிதராய்ப் பிறந்தும், புறசமயம்புக்கு உழன்றும், சிவபுண்ணிய முதிர்ச்சியால் அகச்சமயம்புக்கும், கேட்டல், தெளிதல், நிட்டைகூடல் செய்யாது பரமுத்தி வேறுளது எனப் பாவிக்கும் பாவியான நிலை என்று உரை காணலுமாம்.



பேராசிரியர் சித்தாந்த
சைவச் சுடர்மணி
மீ.சிவசண்முகம்,
கோயம்பத்தூர்,
தமிழ்நாடு.

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்.**

எம்பெருமானே! புல்லாகியும், பலவகையான பூண்டுகளாகியும், புழுவாகியும், மரமாகியும், பல விலங்குகளாகியும்,

பறவைகள் ஆகியும், பாம்புகள் ஆகியும், கல்லாகியும், மனிதர்களாகியும், பேய்களாயும், பூதங்களாகியும், வலிய அசுரர்கள் ஆகியும், முனிவர்கள் ஆகியும், தேவர்கள் ஆகியும் படைக்கப் பெற்று வருகின்ற அசையும் பொருளும் அசையாப் பொருளுமாகிய இவற்றுள் எல்லாப் பிறப்புக்களிலும் பிறந்து இளைப்படைந்தேன் என்றவாறு.

ஈண்டுக் கூறப்பெற்ற புல் முதலியன செய்யுள் நோக்கி முறைபிறழ வைக்கப்பெற்றன. ஆயினும் முறைப்படுத்தி உரை காண்க. இவற்றுள் புல், பூண்டு மரம் இவை மூன்றும் தாவரங்கள். புழு பாம்பு முதலிய ஊர்வனவும், பறவைகளும், விலங்குகளும், மக்கள், தேவர், பேய் முதலிய யாவும் சங்கமங்கள்.

**"கல்"** என்பதற்கு தண்டபாணி தேசிகர் மலை என்று பொருள் கொண்டு, உயிர்கள் உடம்பொடுகூடிப் புலப்படுதலாகிய பிறவிக்கு முன்பே மலைதான் இருந்தது. உயிர்கள் அம்மலைகளைச் சார்ந்து அணுக்களிற் புலப்படாது கிடந்தன. பின்னர், பரிபாகம் வந்த காலத்துப் புல் முதலியவாக வடிவு கொண்டன. அறிவு முதிர முதிர அதற்கு வந்த உடலமைப்பும் வளர்ச்சிபெற்றன. ஆதலின் கல்லை முதற்பிறவியாகக் கூறினார். கல் முதற் படைப்பு என்பதைக் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே" என்னும் பழம் பாடற்பகுதியும் நிலைநிறுத்தும் என்று சொல்வார்.

அருணையார், கல்லில் வாழ்கின்ற தேரையைப் போல என்று சொல்லி அங்கு ஒரு விளக்கம் காண்பார்.

**பூடு:-** பூண்டு. **விருகம்:-** மிருகம் என்ற வடமொழியின் ஆக்கம். இவற்றுள் புல், பூண்டு, மரம் என்பன தாவரங்கள். புழுவும், பாம்பும் ஊர்வன. பறவை பறப்பன. விலங்கு நடப்பன. மனிதரும், முனிவரும் மக்கட் பிறப்பினர். தேவர்,அசுரர் தெய்வப் பிறவினர். பேய், பூதங்கள் மனிதச் சார்பு விட்டுத் தெய்வச்சார்பு பெற்றவை. இவ்வண்ணம் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் என்றார். பேய் என்பது நுண்ணுடம்போடு இயங்கும் உயிர். இது கண்டார்க்கு அச்சம் விளைத்தலின் இப்பெயர் பெற்றது. **கணம்:-** பூதகணம். நுண்ணுடம்பில் நிற்பனவும், பருவுடம்பு உடையனவுமாகிய தேவப்பிரிவைச் சார்ந்தவை. **தாவரம் :-** ஸ்தாவரம் என்னும் வடசொல்லின் திரிபு: நிலையான பொருள். **சங்கமம்:-** ஜங்கமம் என்பதன் திரிபு. அசையும் பொருள்.

இப்பகுதியில் உயிரின் தோற்றமுறை மாறாக இருப்பதற்கு உயிர்கள் புண்ணிய பாவ இயல்பிற்கு ஏற்றவாறு உயர்ந்தும், தாழ்ந்தும் மாறி மாறிப் பிறத்தலைக் காரணமாகக் கூறுவாரும் உளர்.

**"மிக்காய் விளங்கொளியாய்**
**எண்ணிறந் தெல்லை யிலாதானே**
**நின் பெருஞ்சீர்"**

**"மிக்காய்"** என்பது மேல் உள்ளவனே என்று சொல்லி அவன் இவ்வாறு இவ்வுலப் பொருட்கள் யாவற்றையும் தொழிற் படுத்தியும், இந்த உயிர்கள் எல்லாம் பல்வேறு அனுபவங்கள் பெறுவதற்கு காரணமாய் இருந்தும் அவன் விகாரியாவான். நிர்விகாரியாக இருப்பான் என்பதைத்தான் **"மிக்காய்"** என்று மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் எழுதுகிறார்.

அருணை வடிவேல் முதலியார் **"மிக்காய்"** என்பதனை மேல் உள்ளவனே என்றும், விளங்கு ஒளியாய் என்பது, தானே விளங்கும் அறிவு வடிவாய் என்றும் சொல்வார். மேலும் கீழுமாய் இருக்கின்ற விண்ணையும் மண்ணையும் கூறவே, இடை நிற்கின்ற பிற பூதங்கள் யாவும் அடங்கின. ஆகவே **"பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால் போக்கிலன்,வரவிலன் எனநினைப் புலவோர்"** என்று திருப்பள்ளி எழுச்சியிலும் சொல்வார். அதனால் விண்ணிலும் மண்ணிலும் நிறைந்து நிற்கும் ஆற்றால் அவற்றின் மேல் உள்ளவனை அதாவது அதற்கும் அப்பாற்பட்டவனை ஆதலால் இயல்பாகவே விளங்கும் அறிவுடையை ஆமாற்றால் ஆன்ம அறிவை கடந்து நின்று வரம்பின்றி பரந்து நிற்பவனே என்க. **"எண்ணிறந்து"** என்பது எல்லா பொருட்களையும் தனது வியாகபத்துக்குள் அடக்கி நிற்பவன் எனவும், **"எல்லை இலாதான்"** என்றது, தான் ஒன்றன் வியாபகத்துள் உட்படாதவன் என்பதுவும் அருளியவாறு.

இங்ஙனம் போந்தன பலவும் இறைவனது புகழ் அளவிடப்படாத பெரும் புகழாய் இருத்தற்குரிய காரணத்தை உடம்பொடு உணர்த்தலால் தெரிவித்தல் பொருட்டு கூறியனவாம் என்பார் அருணையார்.

**"பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்"**

**'பொல்லா வினை'** என்பது தீவினை, இறைவனை மறக்கச் செய்வதில் நல்வினையினும் தீவினை வலிமையுடையது.

நல்வினையினால் வருகின்ற இன்பத்திலும் தேவாதி தேவர்கள் போல சொர்க்காதி போகங்களை அனுபவிக்கின்ற காலத்து இறைவனை மறத்தல் உண்டு. அதே போல தீவினையினாலும் இறைவனை மறத்தல் உண்டு. இறைவனை மறக்க செய்வதில் நல்வினையினும் தீவினை வலிமையுடையது என்பார் அருணையார்.

ஆதலின் **"புகழுமாறு ஒன்றறியேன்"** என்றது. புகழ்தல் என்றது சொல்லுதல் என்ற பொருளிலே அவன் நான் உன்னை ஒன்று சொல்ல வேண்டுமென சொன்னால் "பொல்லா வினையேன்" என்பதற்கு "புகழுமாறு ஒன்றறியேன்" இவர் செய்த நல்வினை திருவடிக்கண் இடையறா பேரன்பையும்,

சிவப்பணி செய்யும் சிந்தையையும் அளித்திருக்கவும் சிவனருளைப்பெற வாய்ப்பாக விளங்கவும் "பொல்லா வினையேன்" என பொதுமையில் கூறியது கண்ட திருவடியையும் குருமேனியையும் எப்போதும் காணக் கொடுத்து வைக்காத தீவினை பெரிதா தோன்ற அதனைக் குறித்து கூறியவாறாம் என்பார் தண்டபாணி தேசிகர்.

புகழுமாறு ஒன்றறியேன் என்பது நீ "விளம்புமா விளம்பே" என ஒன்பதாம் திருமுறை சொல்வது போல அடியேன் உம்மை புகழும் உபாயத்தையும் தேவரீர் நீரே அருள வேண்டும் என்பதாம். யான் ஒன்றை எவ்வாறு சொல்ல முடியும், யான் ஒன்றை சொல்லுவதும் உம்முடைய திருவருளாலே நடைபெற வேண்டும் என்று இரங்கி கூறிய கருத்து.

பொல்லா வினைக்கு கேவல நிலையில் மல வசமாய் கிடந்தும், பின் மனிதராகப் பிறந்தும், புறச்சமயம் புக்கு உழன்றும் சிவபுண்ணியம் முதிர்ச்சியால் அகச்சமயம் புக்கும், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் செய்யாது பரமுத்தி வேறு உள்ளது என பாவிக்கும் பாவியான நிலை என்பது பழைய உரை.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## ஈழத்தின் பாடல்பெற்ற திருத்தலங்களில் ஒன்றான, பாலாவியின் கரைமேல் அமர்ந்து அருளும் திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில்






சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு


சிவபூமி என திருமூலரால் சிறப்பித்துக் கூறப்படுகின்ற ஈழவள நாட்டில் சைவசமயத்தின் பழமைக்கும் சிறப்பிற்கும் எடுத்துக் காட்டாக அமைந்த ஐம்பெரும் ஈச்சரங்களில் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டும் மிகப் புராதனமானதும், நாயன்மார்களினால் சிறப்பித்துப் பாடல் பெற்ற திருத்தலமாகவும் விளங்குகின்றன. அது மட்டுமன்றி தமிழகத்துச் சைவர்களும் அறிந்து போற்றுகின்ற சிறப்பினையும் பெற்றிருக்கின்றன. இவ் இரு தலங்கள் பற்றிய சிறப்புகள் திருமுறைகளிலும், பத்தி இலக்கியங்களிலும் பரவி வந்துள்ளன.

### திருக்கோயில் அமைவிடமும் மாதோட்டச் சிறப்பும்

இலங்கையில் மன்னார் மாவட்டத்தில் மாந்தை என்று அழைக்கப்படுகின்ற மாதோட்டம் என்ற இடத்தில் இப்பழம் பெரும் சிவன்கோயில் அமைந்துள்ளது. புராதன காலத்திலே திருக்கேதீச்சரம், மகாதுவட்டாபுரம் என அழைக்கப்பட்டதாகவும் அப் பெயரே பின்னதாக மாதோட்டம், மாந்தோட்டை, மாந்தை என மருவி வந்துள்ளதாகவும் ஒரு சாரார் கூறுவர்.

இவ்விடம் புராதன பாளி, சிங்கள நூல்களில் மஹாதித்த, மஹாதித்த பட்டணகாம, மஹாதித்த பட்டண, மாவுடு எனவம் பேசப்பட்டு வந்துள்ளது. நாயன்மார்களின் பத்திப் பாடல்களில் மாதோட்டம், மாதோட்ட நன்னகர் என்றும் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

புராதன காலம் முதலாக மாதோட்டம் இலங்கையின் பிரதான துறைமுகப்பட்டின மாக விளங்கியுள்ளது. இவ்விடத்தில் மல்வத்து ஓயா எனும் ஆறும் கடலும் கலக்கும் பகுதியாக இருந்ததனால் சங்கும் முத்தும் மிகுதியாக மன்னார் கடலில் விளைந்தன. அவை பெறுமதி மிக்கவையாகவும் இருந்ததோடு ஆபரணங்களுக்காகவும் உபயோகிக்கப்பட்டன. அவை கடல் கடந்த வாணிபப் பொருளாகவும் மதிக்கப்பட்டன. இவ்வாறு மாதோட்டம் ஒரு கரையோரப்பட்டினம் என்ற வகையில் தேவாரம் பாடிய தேவார முதலிகள் காலத்தில் செல்வம் மிகுந்த சிறந்த வணிக நகராக விளங்கியுள்ளதை மேல்வரும் அவர்களின் பதிக அடிகள் வாயிலாக தரிசிக்க முடிகின்றது.

**“பொன்னிலங்கிய முத்து மா மணிகளும்
பொருந்திய மாதோட்டம்.”**

**- (சம்பந்தர் தேவாரம்)**

**“வங்கம் மலி கின்ற கடல் மாதோட்ட நன்னகர்:
வையம் மலி கின்ற கடல் மாதோட்ட நன்னகர்
வானத்துறு மலியுங் கடல் மாதோட்ட நன்னகர்**

**- (சுந்தரர் தேவாரம்)**



அது மட்டுமன்றி நீர் வளத்தாலும் நில வளத்தாலும் மிகச் செழித்து பொழில் பூத்த பதியாகவும் மாதோட்டம் விளங்கியது. மா, வாழை, தென்னை, கமுகு போன்ற பயன்தரும் மரங்கள் சோலைகளாக காட்சியளித்தன. மற்றும் நறு மணம் வீசும் மலர்ச் செடிகள் நிறைந்த சோலைகளும் பூத்துக் குலுங்கின. மலர்களில் நிறைந்திருந்த தேனினை அள்ளிப் பருக வண்டுகள் யாழிசை போல ரீங்காரம் இசைத்தன. இதனைச் சுந்தரர் பெருமான் தமது தேவாரத்தில் **"வரிய சிறை வண்டு யாழ் செயும்"**, **"சிறையார் பொழில் வண்டியாழ் செயும்"** என்றும் பாடியுள்ளார்.

என்றும் கதையுண்டு.

இத்தலம், இராமாயணக்கதைப்படி மயனின் மகளும் இராவணனின் மனைவியுமாகிய மண்டோதரி இத் தலத்தை வழிபட்டாள் என்றும், இராமன், இராவணன் பூசித்த தலம் என்றும் கூறப்படுகின்றது. தட்சிணகைலாச புராணத்தில் தீர்த்த யாத்திரை சென்ற அருச்சுனனும் இத் தலத்தைப் போற்றினான் என்று கூறுகின்றது. அகத்திய முனிவரும் பத்து சுலோகமமைந்த **'கேதீச்சர தசகம்'** எனப்படும் துதி பாடி கேதீச்சரப் பெருமானின் திருவருள் பெற்றார் என்றும் கூறப்படுகின்றது.



## மரபுவழிக் கதைகளில் திருக்கேதீச்சரம்

இத் தலத்தை தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், அடியார்கள், பல உயிரினங்களும் பூசித்து வரம் பெற்றதாக சரித்திரங்களும், கர்ணபரம்பரைக் கதைகளும், வாயுபுராணக் கதைகளும் பேசுகின்றன. கேது என்பவன் அசுரர்களில் வலிமை படைத்தவன். அசுர கூட்டத்தோடு சேர்ந்திருந்தமையால் அகங்காரம் உற்று, பின் தன் பிழை உணர்ந்து தன் உள்ளத்தில் மாதோட்டப் பெருமானை இடைவிடாது தியானித்து அருள் பெற்றார். அதனால் மாதோட்ட இறைவன் கேதீச்சரநாதர் என்றும் தலம் கேதீச்சரம் என்று அழைக்கப்படுவதாயிற்று என்பர். மற்றும் கேதுபகவான் கேதீச்சர இறைவன் மீது **"கேதீச்சர அஷ்டகம்"** பாடித் துதித்து திருவருள் பெற்றாராம்

விசயனுடன் இலங்கைக்கு வருகை தந்த உபதிஸ்ஸன் என்னும் பிராமணன் திருக்கேதீச்சரத்தில் பூசை செய்தார் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இலங்கையின் பழமைக் குடிகளில் ஒருவரான நாகவம்சத்தினரும் இத் தலத்தைப் போற்றியுள்ளார். இதனால் **"நாகநாதர்"** என்றொரு பெயர் திருக்கேதீச்சரப் பெருமானுக்கு இன்னமும் வழங்கப்பட்டு வருகின்றது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட சிறீமேக வண்ணன் என்னும் சிங்கள மன்னன் காலத்தில் மாதோட்டத்தில் ஒரு சைவக்கோயில் இருந்தமை பற்றி தாதுவம்சம் என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்




**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்**
**வந்து பாடிய வண்ண முறைசெய்வோம்"**

### அடியார் பசி தீர்க்க ஐயமேற்ற மருந்தீசுவரர்

திருக்கழுக்குன்ற தரிசனம் முடித்துச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கச்சூர் அடைகின்றார். ஆலக்கோயில் கச்சபேசுவரரைத் தரிசித்துவிட்டு மதிற்புறத்தில் அமர்ந்தவர், உச்சிப் பொழுதில் பசியால் களைப்புற்றார். தம் தோழரின் பசி தீர்க்க எண்ணிய மருந்தீசுவரப் பரம்பொருள், வேதியர் வடிவம் தாங்கி அவர் முன் தோன்றினார்.

இக்காட்சியினைச் சேக்கிழார் பின்வருமாறு விவரிக்கின்றார்:

**வன்தொண்டர் பசிதீர்க்க மலையின்மேல் மருந்தானார்**
**மின்தங்கு வெண்தலையோடொழிந்து ஒருவெற்றோடேந்தி**
**அன்றங்கு வாழ்வாரோர் அந்தணராய்ப் புறப்பட்டுச்**
**சென்றன்பர் முகநோக்கி அருள்கூரச் செப்புவார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 176)**

**"உம் பசி தீர்க்க யாம் சோறு இரந்து வருகின்றோம்"** என்று கூறி, கச்சூர் இல்லங்கள் தோறும் செந்நிறத் திருவடிகள் நோகப் பிச்சையேற்றார் ஆதிப்பிரான். திருநீறு துலங்க, ஊரார் இட்ட உணவினைப் பெற்று வந்து, தாயினும் மேலான பரிவோடு சுந்தரரிடம் தந்தார்.

**வெண் திருநீற்றணி திகழ விளங்குநூல் ஒளிதுளங்கக்**
**கண்டவர்கள் மனமுருகக் கடும்பகற்போது இடும்பலிக்குப்**
**புண்டரிகக் கழல்புவிமேல் பொருந்த மனைதொறும் புக்குக்**
**கொண்டுதாம் விரும்பிஆட்கொண்டவர்முன் கொடுவந்தார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 178)**

அவ்வுணவை அடியார் குழாத்துடன் உண்ட சுந்தரர், வேதியர் மறைந்ததைக் கண்டு பசி போக்கியது பரமனே என்றுணர்ந்து நெகிழ்ந்தார். **"எம் பெருமானே! வெயில் வேளையில் உன் திருவடிகள் நோக இல்லங்கள் தோறும் இரந்தால் அடியார் மனம் உருகாதோ?"** என்று 'முதுவாய் ஓரி கதற' பதிகத்தைப் பாடினார்.

**கச்சேர் அரவொன்று அரையில் அசைத்துக் கழலும்**




சிலம்பும் கலிக்கப் பலிக்கென்று
உச்சம் போதா ஊரூர் திரியக் கண்டால் அடியார் உருகாரே
இச்சைஅறியோம் எங்கள் பெருமான் ஏழேழ் பிறப்பும் எனையாள்வாய்
அச்சம் இல்லாக் கச்சூர் வடபால் ஆலக்கோயில் அம்மானே
- (சுந்தரர் தேவாரம்: திருக்கச்சூர் - திருப்பாடல் 2)

இவ்வாறு, தன் அடியவனுக்காகத் தானே இரந்து சோறு அளித்த இறைவனின் கருணையை மிகுந்த பத்தியோடு போற்றித் தனது யாத்திரையைத் தொடர்ந்தார் சுந்தரர்.

### காஞ்சி மாநகரில் தம்பிரான் தோழர்

சுந்தரர் திருக்கச்சூரிலிருந்து புறப்பட்டு, வழிநெடுகிலும் உள்ள சிவத்தலங்களைத் தரிசித்தவாறே காஞ்சிபுரம் திருத்தலத்தைச் சென்றடைகின்றார். ஆவணம் காட்டி ஆட்கொண்ட ஆளுடைய நம்பிகள் வருகையை அறிந்த காஞ்சி நகரத் தொண்டர்கள், வீதிகளெங்கும் தோரணங்கள் அமைத்தும், இல்லங்களில் விளக்கேற்றியும் அவரை எதிர்கொண்டு வரவேற்றனர். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு பாடுகின்றார்:

ஆண்ட நம்பி எதிர்கொண்ட அடியார் வணங்க எதிர்வணங்கி
நீண்ட மதிற்கோபுரம் கடந்து நிறைமாளிகை வீதியிற்போந்து
பூண்ட காதல் வாழ்த்தினுடன் புனைமங்கல தூரியம் ஒலிப்ப
ஈண்டு தொண்டர் பெருகு திருஏகாம்பரம் சென்றெய்தினார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 186)

ஆலயத்தை அடைந்த சுந்தரர், கருவறையினுள் கம்பையாறு பெருகி வந்தபோது அஞ்சி இறைவனை ஆரத் தழுவிக்கொண்ட அன்னை ஏலவார்க்குழலியின் மெய்யன்பினை நினைந்து ஏகாம்பரநாதரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகின்றார்.

கைகள் கூப்பி முன்அணைவார் கம்பையாறு பெருகிவர
ஐயர் தமக்கு மிகஅஞ்சி ஆரத் தழுவிக் கொண்டிருந்த
மையுலாவும் கருநெடுங்கண் மலையாள் என்றும் வழிபடுபூஞ்
செய்ய கமலச் சேவடிக்கீழ்த் திருந்து காதலுடன் வீழ்ந்தார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 188)

பரவசமாய் விம்மி அழுது அவர் பாடிய திருப்பதிகம் நமக்கின்று கிடைக்கவில்லை. பின்னர் அத்தலத்திலுள்ள பிற திருக்கோயில்களையும் தரிசிக்கும் பொருட்டு அப்பதியில் சிறிது காலம் தங்கியிருக்கின்றார்.

வீழ்ந்து போற்றிப் பரவசமாய் விம்மியெழுந்து மெய்யன்பால்
வாழ்ந்த சிந்தையுடன் பாடி மாறா விருப்பில் புறம்போந்து
சூழ்ந்த தொண்டருடன் மருவும் நாளில் தொல்லைக் கச்சிநகர்த்
தாழ்ந்த சடையார் ஆலயங்கள் பலவும் சார்ந்து வணங்குவார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 189)

அதன்பின் காமக் கோட்டத்தில் காமாட்சி அம்மையைத் தரிசித்து, கச்சி மேற்றளி தலத்தைத் தொழுதேத்துகின்றார். ஓணகாந்தன்தளியில் இறைவனிடம் பொன் வேண்டிப் பாட, அண்ணலின் திருவருளால் பெருஞ்செல்வம் கிடைக்கப் பெறுகின்றார். இதன் தொடர்ச்சியாக அனேகதங்காவதம், பனங்காட்டூர், திருமால்பேறு முதலிய தலங்களைத் தரிசித்தவாறே திருக்காளத்தி மலையினை நோக்கித் தனது பயணத்தைத் தொடர்ந்தார். இவ்வாறாகக் காஞ்சி மாநகரில் ஏகாம்பரநாதரைத் தரிசித்த சுந்தரர், மிகுந்த பத்தியோடு அங்குள்ள பல சிவத்தலங்களையும் பாடிப் பரவினார்.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
படம்-தேவராஜன் நடராஜன்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பன்னாட்டு சைவசித்தாந்த ஆய்வு மாநாடு – 2026





















# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பன்னாட்டு சைவசித்தாந்த ஆய்வு மாநாடு - 2026

















# வடமாகாண பாடசாலைகளுக்கான சிவனிரவு பூசைப் பொருட்கள் கையளிப்பு




கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி



கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்



கிளி/ கோணாவில் மகா வித்தியாலயம்



கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்



கிளி/ பளை மத்திய கல்லூரி



கிளி/ பளை இந்து ஆரம்ப வித்தியாலயம்



யா/ வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

# வடமாகாண பாடசாலைகளுக்கான சிவனிரவு பூசைப் பொருட்கள் கையளிப்பு


கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம்


யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்


யா/ உடுத்துறை மகா வித்தியாலயம்


யா/ கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாசாலை


மு/ பிரமந்தனாறு மகா வித்தியாலயம்


மு/ விசுவமடு மகா வித்தியாலயம்

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்


பவானி சிவ அ.வேலுச்சாமி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**திருநகரச் சிறப்பு:- பாடல் - 32**

**அவ்வுரை கேட்ட வேந்த னாவுறு துயர மெய்தி**
**வெவ்விடந் தலைக்கொண் டாற்போல் வேதுனை யகத்து மிக்கிங்**
**கிவ்வினை விளைந்த வாறென் றிடருறு மிரங்கு மேங்குஞ்**
**செல்விதென் செங்கோ லென்னுந் தெருமருந் தெளியுந்தேறான்**

**பொருள்:** அந்த நிகழ்வைக் கேட்ட அரசன் பசு அடைந்த துன்பத்தை தானும் அடைந்தவனாகி விடம் தலையின்மீது ஏறிவிட்டார் போல உள்ளே வேதனை மிகுந்து, இங்கு இக் கொடுமை விளைந்தது எவ்வகை என்று துன்பப்படுவான், இரங்கவான், ஏங்குவான், தன் செங்கோல் செவ்விது என்ற தன்னையே இகழ்ந்து கொள்வான், மனஞ்சுழல்வான், பின் சிறிது தெளிவுகொள்வான்: ஆயினும் தேற்றத்தை அடைய மாட்டாதவனாயினான்.


சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்

**விளக்கவுரை:** கேட்டவேந்தன் ஆவுறு துயரம் எய்தி:– கேட்டபோதே பசுவினது துன்பத்தைஅரசன்அடைந்தான்.இதுதனையன்பின் திறம் பசுவின் துன்பத்தை இப்போது அடைந்ததே பின் நிகழ்ச்சியில் அரசனை செழுத்தியது.

அரசன் அடைந்த அளவில்லாத துயரத்தைக் கண்டு அமைச்சர் அவன் பேரருளை நோக்கி வணங்கி, அரசே! மனம் தளந்து துயரமடைவது இதற்குத் தீர்வாகாது" அந்தணர்கள் விதித்த வழியே உம் மைந்தனை முறை செய்வதுதான் அறநெறியாகும்" என்று சொன்னார்கள்.

**பாடல்:- 33**

**"வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்**
**குழக்கன்றை யிழந்தலறுங் கோவுறுநோய் மருந்தாமோ?**
**இழக்கின்றேன் மைந்தனையென் றெல்லீருஞ் சொல்லியவரச்**
**சழக்கின்று நானினசந்தாற் றருமந்தான் சலியாதா?"**

**பொருள்:** மறையந்தணர்கள் விதித்தவழி மைந்தனை நீத்தலே இதற்குத் தீர்வாகிய வழக்கு என்று நீங்கள் சொன்னீர்களானால் வலிந்துகொல்லப்பட்டமையால் இளங்கன்றை இழந்து அலறுகின்ற பசுவின் துன்பத்துக்கு அது மிகுந்தாகுமோ? நான் என் மகனை இழந்து விடுகின்றேன் என்ற கருதி நீங்கள் எல்லோரும் சேர்ந்து சொல்லிய இந்த தீமைக்கு நான் உடன்பட்டால் தருமதேவதைதான் சலிப்படையாதோ?

**விளக்கவுரை:** மைந்தனை இழக்கின்றேன் என்று:– நான் இப்பசு நோய்க்குத் தீர்வாக அதன் துயரத்தையே தாங்கும் பொருட்டு என் மைந்தனை அவ்வாறே இழக்கத்

துணிகின்றேன் என்று உட்கொண்டு அதை விலக்கக் கருதி என்றபடி அரசன் உள்ளம் செல்வழியை அவனடைந்த துயரத்தின் மெய்ப்பாடுகளி லிருந்து மதியூகிகளாகிய அமைச்சர் உணர்ந்தனர். அமைச்சர்களது உள்ளக் கருத்தை அரசனும் உணர்ந்தான் என்க.

**தருமம்:-** அறக்கடவுள், சலித்தல்:- அசைத்தல், அறம் எக்காலத்தும் எவ்விடத்தும் ஒருபடித்தாய் நிலைபேறு பெற்றுச் செல்வது போல நிலைத்த லின்றி அசைந்து வருதல்.

**இசைத்டதல்:-** நான் இசையமாட்டேன் என்று குறிப்பு.

**பாடல்:- 36**

**"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்**
**தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்**
**ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்**
**ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ?"**

**பொருள்:** நிலத்தில் வாழும் பல உயிர்களையும் காவல் செய்யும்போது, அதற்கு இடையூறாகத் தன்னாலும், தன் பரிசனங்களாலும், பகைவர் களாலும், கள்வராலும், ஏனை உயிர்களாலும் வரும் ஐந்து பயங்களையும் தீர்த்துத் தருமத்தை பிறழாமற் பாதுகாக்கின்றவன் அல்லனோ மாநிலங்காவலன் என்ற பெயருக்க உரிமையுடையவன்" (இந்தப் பாடல் மூலமாக அரசன் அரசியல் தருமம் யாது என்பதை உலகத்துக்கு அறிவுறுத்தியதாக கூறப்பட்டுள்ளது)

**விளக்கவுரை:** இஃது எல்லா நாட்டிலும் எல்லா அரசர்க்கும் எல்லாக் காலத்துக்கும் குறிக்கோளாய் இருக்கத்தக்கது.

அரசர் கடமைகள் முற்றும் இதில் அடங்கவனவாம். அரசாங்கம் முடியரசோ - குடியரசோ - பொதுவரசோ எவ்வரசோ ஆயினும் அவையாவும் இதனையே குறிக்கோளாகக் கொள்ளக் கடவன என்பது அறிஞர் துணிவு என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் உரைக்குறிப்பில் கூறியுள்ளார்கள்.

**தன்னால்:-** தன்னால் வருவன (அரசனால்) இறைப் பொருளை மிகுதி கொள்ளுதல், அதனை வலிந்து கொள்ளுதல், கொடுக்கவகையில்லாரிடம் கொள்ளுதல், அல்லவை நீக்காது ஒழுகுதல், காட்சிக்கு அரியனாதல், கடும் சொல்லானாதல், குடிக்கும் துணையாயினார் சொற்களைக் கேட்கப் பொறுக்கும் பண்பிலினாதல் அறநிலையைப் பொருளை வவ்வுதல் முதலியன.

**தன்பரிசனத்தால்:-** அரசனிடம் அதிகாரம் பெற்றோம் - அரசனது வலிய சார்பு பெற்றோம் என்ற இருமாப்பினால் வரும் இவரால் ஆவன - நியதி மீறிய எவ்வகையான மிகைச் செயல்களுமாம்.

ஊனமிகு பகைத்திறத்தால்:- எவ்வழியிலும் அரச ஆணையின் மிகுந்து மீளும் வலிமை பெற்றபோது பகைவர் இடையூறு விளைப்பர்: ஆதலின் திறம்என்றார். பகைத்திறத்தாலான பயம் - பசுக்கவர்தல் - கொள்ளையிடல் - மாதர் கற்பழித்தல் முதலியன.

கள்வராலாவன:- வழிப்பறி முதலியன.

உயிராலாவன:- புலி - யானை போன்ற மிருகங்களால் ஆன பயம் இங்கு அரசன் தன் மைந்தனால் வந்தது பரிசனப் பயம் என்ற பகுப்பில் அடங்கும்.

பயம் தீர்த்துக் காத்தலே காவலன் கடமை என்பதை "இத்தனை காலமும் நினது சிலைக்கீழ் தங்கி இனிது உண்டு தீங்கின்றி இருந்தோம்" என்று நாகனிடத்தில் தன்னுடைய குடிமக்கள் கூறுவதாக கண்ணப்பநாயனார் புராணத்தில் காணலாம்.

**அறம்காப்போன்:-** அரசியல் ஆணை இடையறாது செல்லவேண்டியதாகிய அறநெறிக்கு இடையூறு வராமல் காவல் புரிபவன்.

**அல்லனோ ஆவான் -** எனும் வினா அவனேயாவான் என்ற உடன்பாட்டுத் தேற்றம் பொருளில் வந்தது. இப்பாட்டினால் நிலங்காவலன் தன்மையும் அருமையும் கூறியவாறு.

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**சூரன்போரின்போது பலகோயில்களில் வேலாயுதத்தை உமாதேவியார் கொடுப்பதுபோல் விழாச் செய்கின்றனரே, இது கந்தபுராணத்திற்கு ஏற்புடையதா?**

முருகப்பெருமானுக்கு வேலாயுதத்தைக் கொடுத்தது சிவபெருமானேயாவார். சிவபெருமானே வேலாயுதத்தைத் தோற்றுவித்து, முருகப்பெருமானின் திருக்கரங்களில் கொடுத் தருளினார். வடமொழிக் கந்தபுராணத்திலும் முருகப்பெருமானே நாள்தோறும் திருத்திக்கொடுத்த கச்சியப்ப சிவாசாரியப் பெருமானின் செந்தமிழ்க் கந்தபுராணத்திலும் சிவபெருமானே வேலாயுதத்தைத் தோற்றுவித்துக் கொடுத்தருளினார் என்று கூறப்பட்டுள்ளது.

**ஆயதன் பின்னர் ஏவில்முது அண்டத்து**
**ஐம்பெரும் பூதமும் அடுவ,**
**தேயபல் உயிரும் ஒருதலை முடிப்ப**
**தேவர்மேல் விடுக்கினும் அவர்தம்**
**மாயிரும் திறலும் வரங்களும் சிந்தி**
**மன்னுயிர் உண்பதுஎப் படைக்கும்**
**நாயகமாவது ஒருதனிச் சுடர்வேல்**
**நல்கியே மதலை கைக்கொடுத்தான்** – கந்தபுராணம் (உற்பத்திக் காண்டம்)

**பொருள் :- அதற்குப் பிறகு, செலுத்தினால் முழுமையான அண்ட கோளத்தில் உள்ள பெரிய பஞ்ச பூதங்களையும் அழிக்க வல்லதும், உலகில் பொருந்தியுள்ள பலவகை உயிர்களையும்ஒருசேர அழிக்கவல்லதும், யார்மீது செலுத்தி னாலும் அவர்களுடைய சிறந்த வலிமையினையும் அழித்து நிலை பெற்ற உயிரைக் கொல்வதும், எல்லா ஆயுதங்களுக்கும் தலைமை வகிக்கும் சிறப்புள்ளதுமான, ஒளிபொருந்திய ஒப்பற்ற ஒரு வேலாயுதத்தை உண்டாக்கி, அதனைப் புதல்வன் முருகனின் திருக்கையில் கொடுத்தான், சிவபெருமான்.**

முருகப்பெருமான் நாள்தோறும் திருத்திக்கொடுத்த கந்தபுராணத்தினை மதித்து நடப்பதுவே முருகப்பெருமானின் அருளினைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும். ஏகான்மவாத சுமார்த்தமதத்தவர் சிவபெருமானுக்கு முதன்மைகொடுப்பதில் நாட்டமின்மையால், சாக்த மரபுகளை வலுப்படுத்தி சிவபரத்து வத்திற்கு விரோதமாக சத்திவழிபாட்டை முதன்மைப்படுத்தும் செயற்றிட்டத்தை பலகோயில்களில் கந்தபுராணத்திற்கு விரோதமாகப் புகுத்தியுள்ளனர். அரசியல்நோக்கில் தாபிக்கப் படும் எந்த இட்டுக்கட்டுக் கூத்துக்களும் சிவவிரோதமாகவே முடிவுறும் என்பதனை உணர்ந்து, சைவசமயத்தவர் கந்தபுராண நூல்வழி நிற்றல் கடனாகும்.

**சிவபெருமானைச்சிவபெருமான்என்னும்திருப்பெயரினால் வழிபடாது இறைவன், கடவுள், தெய்வம் என்றெல்லாம் வழிபடு வதில் ஏதேனும் இடர் உண்டா? ஒருசிலர் சிவபெருமான் பல்லா யிரம் பெயர் உடையவன் என்றும்,எந்தப் பெயரில் எப்படி வழிபட்டாலும்ஒன்றுதான் என்றும்கூறுகின்றனரே? இஃது ஏற் புடையதா?**

கடவுள் என்றால் கடந்தும் உள்ளும் இருக்கும் தன்மையைக் குறிக்கும். அஃதாவது சிவபெருமான் எங்கும் நிறைந்தவர் என்பதனைக் குறிக்கும் சொற்பதமாகும். தெய்வம் என்றால் ஒளியுடையது என்பது பொருளாகும். ஒளியென்றால் அறிவு என்றும் கொள்ளலாம். எனவே, தெய்வம் என்பது ஒளியுடையது என்றும் அறிவுடையது என்றும் பொருள்படும். எனவே, தெய்வம் என்னுஞ் சொற்பதம், சிவபெருமான் பேரறிவுப்பொருள் என்பதனைக் குறிக்கும். தெய்வம் என்பதிலுள்ள தெய் என்பதே தேவு என்றும் தேவன் தேவி தேவர் என்றும் வழங்குவதாயிற்று. சுவாமி என்பதும் சாமி என்பதும் செல்வம் சொத்து முதலியன உடையவன் என்னும் பொருளில் வழங்கும் சொற்பதமாகும். உயிர்களை அடிமைப்பொருளாகவும் உலகை உடைமைப் பொருளாகவும் உடையவன் என்பதனால் சுவாமி என்னும் சொற்பதமும் சிவபெருமானுக்கே உரித்தானது என்க. இறைவன் என்றால் எல்லாவற்றுக்கும் தலைமை தாங்குபவன் என்றும், எல்லாப் பொருளிலும் நிறைந்திருப்பவன் என்றும் பொருள்படும். முதல்வன் என்றால் எல்லாவற்றுக்கும் நிமித்த காரணன் என்று பொருள்படும். ஆண்டவன் என்றால் எல்லாவற்றையும் ஆள்பவன் என்று பொருள்படும். பதி என்றால் தலைவன் என்றும், பரம்பொருள் என்றால் மேலான பொருள் என்றும் பொருள்படும். இவ்வாறு எந்தச் சொற்பதத்தை எடுத்தாலும் அஃது சிவபெருமானின் ஏதோவொரு இயல்பையோ, அல்லது ஒருசில இயல்புகளையோ குறிப்பிடுவனவாகவுள்ளனவேயொழிய, சிவபெருமானின் இயற்கை இயல்பை முழுமையாக உணர்த்துவனவாகவில்லை என்பது புலப்படும். கடந்தும் உள்ளும் இருப்பவன் என்பது பேரறிவு உடையவன் என்பதனை உணர்த்தவில்லை. ஆள்பவன் என்பது விகாரமடையான் என்பதனை உணர்த்தவில்லை. தலைவன் என்பது பிறப்பு இறப்பு இல்லான் என்பதனை உணர்த்தவில்லை. இவ்வாறு ஒவ்வொரு சொற்பதமும் சிவபெருமானின் ஒருசில இயல்பை மட்டுமே குறிப்பனவாகவுள்ளது நன்கு துலக்கமுறும். சிவபெருமானின் இயற்கை இயல்பை நம்மனோர் உணர்ந்துகொள்வதற்கு ஏதுவாக விளங்கும் சொற்பதம் செம்பொருள் என்பதேயாகும்.


முற்றறிவும் இயற்கை அறிவும் உடையதே செம்பொருளாக இருக்கமுடியும். தன்வயத்தனாக இருப்பவனே செம்பொருளாக இருக்கமுடியும். தூய உடம்பினன் எனப்படும் அருளையே மேனியாகக் கொண்டவனே செம்பொருளாக இருக்க முடியும். அஃதாவது சடப்பொருளை மேனியாகக் கொண்டவன் ஒருபோதும் செம்பொருளாக இருக்க முடியாது. முடிவிலா ஆற்றல் உடையவனே செம்பொருளாக இருக்க முடியும். எந்தப் பாசப்பொருள்களாலும் பற்றப்படமுடியாது விளங்கும் நிர்விகாரியே செம்பொருளாக விளங்க முடியும். பேரருள் உடையவனே செம்பொருளாக விளங்க முடியும். வரம்பு கூறப்படமுடியாத பேரின்பப் பொருளே செம்பொருளாக இருக்க முடியும். எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பொருளே செம்பொருளாக விளங்க முடியும். எனவே, செம்பொருள் என்னும் சொற்பதம் சிவபெருமானின் இயற்கை இயல்பெனப்படும் உண்மையியல்பை உள்ளபடி உணர்த்தும் அருந்தமிழ்ச் சொற்பதமாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**(தொடரும்)**




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# The lack of proper and Accurate Efforts to preserve Saivam in Diasporic Communities

Across the global Tamil diaspora, Saivam remains a powerful cultural and spiritual anchor. Temples are built, festivals are celebrated with grandeur, and devotional songs echo across cities far from Tamil soil. Yet beneath this visible devotion lies a diastoruc crisis, the lack of proper, accurate, and accessible Saiva books or tools for diasporic communities.

We all acknowledge the importance of passing down our knowledge of Saivam to further generations, but what genuine steps are we taking? Sure, building temples and celebrating Saiva festivals play a vital role in preserving the religion. But these are mereley surface level efforts. Not much is being done to showcase more in-depth knowledge on Saivam and Saiva Siddhantha philosophy. I can assure you that if you go ask a diasporic Tamil youth the simple question of "Who is God?", they will remain speechless, unable to mutter an answer.

And to be honest, we cannot blame them. They have not been exposed to the intricacies of Saivam and have rather only been taught the broader concepts of Hinduisim which don't entirely align with our way of life and our philosophies. Hence, if I asked "Who is God?", the most common reply would probably be "well there are many gods, aren't there?" Which is not correct in terms of Saivam, where the one true god is Sivan.

The problem does not begin with the youth. It begins with a generational gap in transmission. Many elders themselves were raised in environments where devotion was emphasised more than philosophical articulation. Without structured texts, reliable translations, or accessible commentaries, even well-meaning parents struggle to explain what they practise.

As a result, Saivam risks being reduced to ritual performance rather than lived theology. If the diaspora is serious about preservation, we must invest not only in temple infrastructure but in intellectual infrastructure. We need accurate English explanations of foundational texts, structured study guides for youth, and philosophically sound resources that remain faithful to primary Saiva scriptures while being accessible to modern readers.

Saivam is not merely an inherited culture; it is a sophisticated and coherent philosophical system. If we fail to transmit its depth alongside its devotion, we risk raising generations who participate in tradition without understanding it.

To preserve Saivam in the diaspora, we must build not only places of worship, but places of knowledge.

# Saiva Saint Muruga Nayanar - The Custodian





Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

The Periya Puranam situates Murugar Nayanar the 15th of the Saivite saintly 63, within the structured ecology of temple life in the Chola country, where ritual is neither ornamental nor episodic, but constitutive of civic continuity. The temple functions as an institutional centre. Its liturgical requirements are sustained through disciplined human labour. Within that framework, Murugar Nayanar undertakes a defined and recurring service: the cultivation, preparation, and offering of floral garlands for the Lord.

Periya Puranam differs to embellish this role and instead records his procedure.

Flowers are gathered before sunrise, selected for freshness and suitability, arranged according to an established order, and delivered without deviation to the sanctum. The act is governed by chants, purity, and correctness. A garland not to be assembled casually in the saint's affairs; it is constructed in conformity with inherited pattern with the pattern serving as acknowledgement of piety and gratitude. The significance of Murugar

Nayanar's account emerges when that sequence is interrupted.

## The test

A ruling authority, having observed the fragrance and workmanship of the garlands, commands that one be brought for royal use. The request appears minor in material terms. Yet the issue presented is religiously structural. A garland already consecrated cannot be reassigned without altering the integrity of the vow under which it was prepared, when it is a subject/instrument of penance or meditation, believe the Sivanadiyars.

Murugar Nayanar thus, refuses. He reasons to the ministers that the garland is not available for redistribution because it no longer belongs to ordinary circulation. Its purpose has been fixed. In declining compliance, Murugar Nayanar does not challenge the legitimacy of kingship; he declines to redirect what has already been designated for sacred use.

The response of the ruler was punitive. Confinement for the Nayanar followed. The Priya Puranam's narrative did not dwell on suffering and rather emphasised the austerity of Murugar's policies. Hence, the nayanar allowed no renegotiation of terms.

Shortly after the punishments execute for the nayanar, the king encounters horrid physical afflictions that apparently mirrored the effects of Murugar's wounds. The ministry and the sovereign discovered that the afflictions were directly linked as agony intensified. Recognition led to repentance. Murugar Nayanar then was released. Ritual order resumed. The garlands once again proceeded directly to their intended destination.

## Rememberance

The episode defined that political power retains its sphere; ritual obligation retains its own. Stability is restored when each operates within proper boundary. The correction is not revolutionary. It is constitutional in character. The ruler remains ruler. The devotee remains gardener. What changes is the recognition that consecrated obligation is not subject to arbitrary reassignment.

Murugar Nayanar's service is marked by purity with standards such as that the flowers must be unblemished and threads must be cleared of smells. This is fidelity to transmitted order. In temple culture, correctness sustains continuity as made apparent through this telling. Unlike certain Nayanars whose narratives culminate in civic elevation or dramatic sacrifice, Murugar Nayanar's distinction lies in sustained regularity. Murugar Nayanar's remembrance endures because he preserved the boundary between vow and preference, celebrated annually on the Vaikasi Mulam day

# தைப்பூச விழாக் காணும் சங்கமன்கண்டி மலைக்குமரன்!



(சென்ற திங்கள் தொடர்ச்சி)

“ஆனால் ஒரு நிபந்தனை இங்கு நடக்கும் எதையும் நீ யாருக்கும் சொல்லக்கூடாது”, “அது ஒண்டுமில்ல... மாடு காணாத்துப் பொயித்து. தேடிக் காட்டுக்க போனநான் வழிமாறித்தனே. “ஆ.. செரி செரி... நானும் வேறங்கயும் பொய்த்தயோண்டு நினைச்சன்”

மனைவியையும் பிள்ளைகளைம் ஆறுதல்படுத்தி குளிக்கப் போனவருக்கு வேட்டியில் முடிந்திருந்த அமுது ஞாபகம் வந்தது. மனைவிக்குக் கொடுப்பதா, பேசாமல் எறிந்துவிடுவதா... சே சே எறிவதற்கா இவ்வளவு தூரம் மினக்கெட்டு எடுத்துவந்தோம். சரி தான்... நடந்த ஒன்றையும் சொல்லக்கூடாது என்று தானே சாமியார் சொன்னார், சாப்பிடக்கூடாது என்று சொல்லவில்லையே!

“இஞ்சே கேட்டயோ...”, “ஆ.. என்ன”, “இஞ்சொள்ளம் வாவன், இத சும்ம சாப்புட்டுப் பாரு, புள்ளேலுக்கும் கிள்ளிக்குடு”, “இதென்னது... எங்கால இது உனக்கு..”, “அதென்னத்துக்கு உனக்கு, சும்ம சாப்புட்டுப் பாரன்” தூக்கிய புருவங்களுடன் மனைவி அந்த அமுதை வாங்கி கேள்விக்குறி மறையாத முகத்துடன் சற்று வாங்கி வாயிலிட்டு உமிழ்ந்தாள்.

“ஆய்..இதென்ன உவளவு ருசியாரிக்கி.. புள்ளே இஞ்ச வா” அமுதை உண்ட குழந்தைகள் வியப்புடன் அம்மாவைப் பார்த்தன. அப்படி ஒரு சுவையான உணவை அம்மா அதற்கு முன்பு செய்ததே இல்லையே. “சரி, அங்கிட்டுப் போய் விளாடுங்கோ”. பிள்ளைகளை வேகமாக அந்தப்பக்கம் அனுப்பிவிட்டு விடுவிடுவென்று கிணற்றடியில் குளிக்கத் தயாராகிக்கொண்டிருந்த கணவனை நெருங்கினாள்.

“இஞ்செண்டுறன்... அம்மாளறிய உண்மையச் சொல்லு. இது உனக்கு ஆரு செஞ்சி தந்த.... ராவு நீ எவள் வீட்ட கிடந்து வந்த நீ” சொல்லும் போதே அவளது நாக்குளறியது. “கண் மூடுற வரைக்கும் நீ எனக்குத் துரோகம் செய்யமாட்டாயெண்டு தான் சீவிச்சித்திருக்கன் நான். என்ன ஏமாத்திராதை..” அவள் விம்மியழத் தொடங்கினார்.



சைவத்திரு.
விவேகானந்தராஜா
துலாஞ்சனன்
(பொதுச்செயலாளர்
இலங்கைச்
சைவநெறிக் கழகம்)

“ஏ.. ஏ.... பைத்தியமா உனக்கு.. என்ன பேய்க்கத கதைக்கிராய் நீ உப்ப”, “நீ அம்மாளறிய சொல்லு நீ ஆரு வீட்ட நிண்டண்டு மட்டும் சொல்லு நேத்து ராவு..”

மனைவியின் அழுகையை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. எவ்வளவோ சொல்லிப்பார்த்தார் கெஞ்சினார், ஒரு கட்டத்தில் “தயவுசெது சொல்லக்கூடாத இரகசியம் என்று சத்தியம் செய்திருக்கிறேன்” என்றும் சொல்லிவிட்டார். அதன்பிறகு அவள் ஓவென விம்மியழத் தொடங்கினாள். அப்போது தான் அவர் காணாமல் போனதைப் பார்க்க வந்து கலைந்திருந்த அடுத்த வீட்டு எல்லைமானம் மீண்டும் குழுமத் தொடங்கியது. மனைவி உறுதி செய்தே விட்டாள். கணவன் யாரோ சககிழத்தி வைத்திருக்கிறார், அவள் செய்து கொடுத்த சாப்பாடு தான் அது, தங்கள் உறவு ஊருக்குத் தெரிந்துவிடும் என்பதால் சத்தியம் வாங்கியிருக்கிறாள். குய்யோ முறையோ என்று மாரிலும் வயிற்றிலும் அடித்து அவள் அரற்ற பக்கத்துவீட்டுப் பெண்கள் அவளருகே அமர்ந்து கண்ணீர் விட்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கினார்கள்.

அவர் ஒரு முடிவுக்கு வந்தார். “மரியாதயா எல்லாரும் வெட்டக்கிறங்குங்கோ... எண்ட மனிசிர பிரச்சினைய நானே பாக்குறன்” அவரது குரலிலிருந்த தீர்க்கத்தைக் கண்டதும் பெண்கள் ஒன்றும் பேசாமல் எழுந்து வெளியே நடந்தார்கள். விடுப்புப் பார்க்கும் கிழவிகள் மட்டும் கிடுகு வேலிகளுக்கு அப்பால் மணலைக் காலால் ஒதுக்கி, காதைத் தீட்டிக்கொண்டு தரையில் குந்தினார்கள்.

அவர் நடந்த முழுக்கதையையும் ஒரு வரி விடாமல் விளக்கினார். குடும்பப் பாசத்தால் ஒரு பிடி அமுதை முடிச்சிட்டுக் கொண்டு வந்ததையும் அது இன்று இவ்வளவு பிரச்சினைக்கு ஆளாக்கியதையும் அவரது மனைவியும் பிள்ளைகளும் நம்பியும் நம்பாமல் பேந்தப் பேந்த விழித்தார்கள். கடைசியாக





அவர் சற்று சத்தமாகச் சொன்னதை அக்கம்பக்கம் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த கிழவிகள் நன்றாகவே கேட்டார்கள்.

"எண்ட தலையறியச் சொல்லுறன், இந்த ஒருவாய் அமுது நேத்து ராவு அந்த சாமியாராக்களோட சாப்புட்டது... சத்தியமா வேறொருதரும் தரல" ஏதோ சன்னதம் வந்ததுபோல் கிணற்றுக்கட்டில் இருந்த முடிச்சில் கடைசிப் பிடி அமுதை அள்ளித் தன் வாயிலிட்டார். அதை அவர் வாயிலிட்டு மெல்லும் சத்தம் மட்டும் கொஞ்சநேரம் கேட்டுக்கொண்டிருந்தது. மனைவி தரையில் அமர்ந்து அவரை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். காற்றும் அப்போது வீசாமல் நின்றது போலிருந்தது. கிடுகுவேலிக்கு அந்தப்பக்கம் ஒட்டுக்கேட்ட ஒரு கிழவி பெருமூச்சு விட்டு காய்ந்த இலை ஒன்றை எடுத்து தரையில் படம் வரைந்தாள்.

மனைவி எழுந்து அவிழ்ந்த கூந்தலை முடிச்சிட்டுக் கொண்டையிட்டாள். "சரி, இத ஏன் அந்த சாமியார் ஊட்ட போய் ஆருக்கும் சொல்லக்கூடா எண்டு சத்தியம் வாங்கினாரு... நான் எப்புடி நம்புற இத" அவர் அவளை ஏறிட்டுப் பார்த்துச் சொன்னார். "பே... பே..", "என்ன?", "பே... பே....", "என்ன பெப்பே எண்டுறாய்... இத நான் எப்பிடி நம்புற எண்டு சொல்லு...", "பே... பே...." அவர் கண்ணீர் வழிய தொண்டையைக் காட்டி கைகளை விரித்தார். மனைவிக்கு அப்போது தான் புரிந்தது. "ஐயோ சங்கமக்கண்டியானே... எண்ட மனுசண்ட நாக்கிளுத்துத்தே... "

சங்கமன்கண்டிக் காட்டில் சாமியாருக்குக் கொடுத்த வாக்கை மீறி மனைவியிடம் நடந்ததைச் சொன்ன அவருக்கு வாய் பேசமுடியாமற் போன கதை ஊர் முழுக்கப் பரவியது. ஒன்றிரண்டு பேராசைக்காரர்கள் தங்கத்தாலான ஆயிரங்கால் மண்டபத்தைத் தேடி காட்டில் அலைந்து வெறும் கையோடு திரும்பிவந்தார்கள். ஊர்ச் சண்டியர்கள் சிலர் அவர் சொன்னது பொய்யென்று மெய்ப்பிக்கிறோம் என்று அந்தக் காட்டுக்குப் போய் ஓரிரவு தங்கித் திரும்பி வந்தார்கள். அதெல்லாம் பொய், அவர்கள் காட்டில் தங்கவில்லை. துவட்டா மலை எல்லையில் யானையும் சிறுத்தைப் புலியும் துரத்தியடித்து பின்னங்கால் பிடரியில் பட ஓடிவந்ததாக அவர்களது நண்பர்கள் கேலி செய்தார்கள். அங்கு முனிவர்கள் வசிப்பது உண்மை என்றும், அது தெய்விக பூமியா என்பதையெல்லாம் சோதித்துப் பார்க்காதீர்கள் என்றும் நம்பிக்கையுள்ள சிலர் சொன்னார்கள். எது எப்படியோ சங்கமக்கண்டி மலை ஆயிரங்கால் மண்டபத்தின் மகிமைக்குச் சாட்சியாக அவர் இறுதிவரை வாய்பேசாதவராகவே வாழ்ந்து மடிந்ததாக அவர் காலத்தவர்கள் கதை கதையாகச் சொல்லுவார்கள்.

இத்தகு பெருமை வாய்ந்த சங்கமன்கண்டி மலையடிவாரத்தில் முன்பு வில்வமரத்தடியொன்றின் கீழ் அமைந்திருந்த மூன்று சிவலிங்க வடிவக் கற்கள் கதிர்காம நடைச்செலவு செய்யும் அடியவர்களால் சிவபெருமானும் அவரது திருக்குமாரர்களான பிள்ளையாரும் முருகனும் என தொன்றுதொட்டு வழிபடப்பட்டு வந்தன. இப்படி மூவர் வழிபடப்பட்டு வந்தபோதும், பின்னாளில் சங்கமன்கண்டிப் பிள்ளையாரையே அத்தலத்தில் அடியவர்கள் முதன்மையாக வழிபட்டு வருவதற்குத் திருவருள் கைகூடியது. ஆனால், சங்கமன்கண்டி மலையில், திருக்கோவில் சித்திரவேலாயுதப் பெருமானின் மாட்டுப்பட்டி பராமரிக்கப்பட்டதாலோ என்னவோ, கதிர்காம யாத்திரிகர்கள், அம்மலையுச்சியை கதிர்காமக் கந்தனின் படைவீடுகளில் ஒன்றாகவே நீண்ட நாள் போற்றி வந்திருக்கிறார்கள்.

பொத்துவில் வீதியில் போக்குவரத்து வசதிகள் முன்னேறாத பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சங்கமன்கண்டி மலையிலிருந்து அடர்காடு ஆரம்பிப்பதாகவும், அருள்வேலனின் ஆடல்கள் கதிர்காம அடியவர்களுக்கு அங்கு தான் ஆரம்பிப்பதாகவும் கதை சொல்லுவார்கள். இன்றும் சங்கமன்கண்டி மலையில் வீற்றிருக்கும் முதன்மையான இறைவன் பிள்ளையாரல்ல் முருகப்பெருமானே என்ற நம்பிக்கையை அசராது கொண்ட ஆறுமுகன் அடியவர்கள் பலருண்டு. சரி தான், அப்பன் கோயில் கொண்ட தலத்தில் இன்று அவனது அருட்குமாரர்கள் இருவருமே ஆட்சி செய்கிறார்கள்!

மலையுச்சியில் குமார தெய்வத்துக்கென வேடர்களால் முன்பு வழிபடப்பட்டதாக நம்பப்பட்ட இடத்தில் "கல்லு வைக்கும்" வழிபாடும் பலன் தரலாயிற்று. "கல்லு வைத்தல்" என்பது தென்மட்டக்களப்புக்குச் சிறப்பான நேர்த்தி வழிபாடுகளில் ஒன்றாகும். குழந்தைப்பேறு, எடுத்த காரியத்தில் வெற்றி முதலிய பல்வேறு நம்பிக்கைகளுக்காக குறித்த இடமொன்றில் கல்லொன்றை எடுத்து வைத்து நேர்த்தி செய்து வழிபடுவதும், அந்நேர்த்தி நிறைவேறியதும் அங்கு மீண்டும் வந்து பொங்கலோ அவலோ படைத்து வணங்கி ஏற்றிய கல்லை "இறக்கி வைத்தல்" வழிபாடும் இடம்பெறும். கல்லு வைத்தல் வழிபாடு இன்றும் சங்கமன்கண்டியிலும் உகந்தமலையிலும் இடம்பெற்று வருகின்றது. (கல்லு வைத்தல் வழிபாடு இடம்பெறும் இடங்களிலெல்லாம் பெருங்கற்காலச் சின்னங்களின் சிதைவுகளை இக்கட்டுரையாளன் அவதானித்துள்ளான். அது உண்மையென்னில் இவ்வழிபாட்டுக்கு மூவாயிரமாண்டுத் தொடர்ச்சியுள்ளது என நம்பலாம்).

கதிர்காம அடியவர்களும் இப்பகுதியில் வேளாண்மை

செய்து வந்த அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில் மக்களும், அவ்வப்போது இங்கு வந்து சங்கமன்கண்டியானுக்கு நேர்த்திக்கடன் வைத்துச் செல்லலாயினர். வேளாண்மைச் செழிப்பு, குழந்தைப்பேறு என்று சங்கமன்கண்டியானும் கைமேல் பலன் தர, அவ்வப்போது நேர்த்திபொங்கலைச் சந்திக்கும் தலமாக சங்கமன்கண்டி வளர்ச்சி காணலாயிற்று. அக்கம்பக்கம் சங்கமக்கண்டியானின் அருள் திறம் பரவ அவனை வழிபட வரும் அடியார் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்தது. மலையடிவாரத்தில் பிள்ளையாரும் மலையுச்சியில் முருகனும் இப்பகுதி மக்களின் அன்புக்குரிய தெய்வங்களாக அரனார் திருமகன்மார் அருளாட்சி புரியலாயினர்.

சங்கமன்கண்டி மலைக்கு அருகாக கடலோரம் விளங்கிய சல்லித்தீவு எனும் பகுதியில் தென்னந்தோட்டமொன்று அமைத்திருந்த தனவந்தரான மட்டக்களப்பு மார்க்கண்டு முதலியார் என்பவர், 1915ஆம் ஆண்டில் இம்முடிக்குரிய நிலத்தை ஆங்கில அரசிடமிருந்து விலைகொடுத்து வாங்கினார். உகந்தமலையிலும் சல்லித்தீவில் மங்கைமாரி அம்மனுக்கும் முதன்முதலில் கல்லால் கோயில் கட்டிய அப்பெருமகனார் சங்கமன்கண்டியிலும் பிள்ளையாருக்கு ஒரு கோயில் கட்ட மனம் கொண்டிருந்தபோதும், இறைவன் திருவுளமென அவரால் இங்கு கோயிலமைக்க முடியாது போயிற்று. ஆனால் பின்னாளில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த சிவத்திரு. வேலுப்பிள்ளை ஓடாவியார் எனும் சைவத்திருமகனார், தன் விடாமுயற்சியாலும் அடியவர் ஒத்துழைப்பாலும் இங்கு ஒரு சிறிய கோயிலொன்றை 1950ஆம் ஆண்டு பிள்ளையாருக்கென அமைத்தார். கோயிலைச் சூழ கனிதரும் மரங்கள், சோலைகள் அமைத்தும் கிணறு வெட்டியும் அன்னார் செய்த பணிகள் இன்றும் சங்கமன்கண்டி அடியவர்களால் பத்திப் பரவசத்துடன் நினைவுகூரப்படுகின்றன.

கோயிலைப் பராமரித்து வந்த வேலுப்பிள்ளையார் தன் அந்திமக்காலத்தில் கோயிலுக்கு ஒரு அறங்காவலர் சபையை உண்டாக்கி அதன்வசம் பொறுப்பை ஒப்படைத்தார். 1960இல் கல்லால் கட்டப்பட்டு முதல் குடமுழுக்குக் கண்ட அக்கோயில் 1979.10.19 அன்று அலங்கிருதமான அர்த்தமண்டபம், மகாமண்டபத்துடனும் அழகான பண்டிகை வேலைப்பாடுகளுடனும் அமைக்கப்பட்டு இரண்டாவது குடமுழுக்குக் கண்டது.

கோயில் மட்டக்களப்பு – பொத்துவில் பெருந்தெருவிலிருந்து சற்று உட்புறமாக காட்டில் அமைந்துள்ளதால், பெருந்தெருவில் செல்லுவோரின் வசதி கருதி வீதியோரம் இன்னொரு சிறுகோயில் அமைக்கப்பட்டுள்ளது. தெருப்பிள்ளையார் என்றும் றோட்டுப்பிள்ளையார் என்றும் அடியவர்களால் அன்போடு அழைக்கப்படும் இப்பிள்ளையாருக்கு அருகே முருகப்பெருமானும் கோயில் கொண்டுள்ளான். றோட்டுப்பிள்ளையாரிடமிருந்து வேறுபிரித்தறிய பழைய சங்கமன்கண்டிக் கோயில் சிலவேளைகளில் காட்டுப்பிள்ளையார் என்று அழைக்கப்படுவதுமுண்டு.



சித்திரை நிறைமதி, ஆடி நிறைமதி, ஆகிய தினங்களில் பிள்ளையாரை அருகிலுள்ள வட்டவான் குளத்தில் எழுந்தருளச் செய்து தீர்த்தமாடச் செய்வது இங்குள்ள விசேட மரபு.

2009ஆம் ஆண்டு சங்கமன்கண்டியானுக்கு திருப்பணிகள் இடம்பெற்று அடுத்த குடமுழுக்கு இடம்பெற்றதுடன், மலையுச்சியில் முருகன் கோயிலொன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அக்கோயில் அமைக்கப்பட்டபோது தொல்லியல் பொருட்கள் பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தமையால் அக்கோயில் அமைப்பு தடைப்பட்டதெனினும், இன்று மலைக்குமரன் கோயில் மலையேறும் அடியார்களுக்கு நல்வரங்கள் அருளும் கோயிலாக அமைந்து விளங்குகின்றது. மலைக்குமரன் கோயிலின் முன்புறத்தில் தான் தொன்றுதொட்டு கல்லு வைத்து வழிபடும் சிறிய புராதான கல்வட்டம் அமைந்து விளங்குகின்றது.

வேண்டியதெல்லாம் அருளும் சங்கமன்கண்டிப் பிள்ளையாரும் பிள்ளைப்பேறும் பீடும் வழங்கும் மலைக்குமரனும் அருவமாக அருளும் சங்கமேசுவரரும், இம்முறை தைப்பூசப் பெருவிழாவை சங்கமன்கண்டித் திருத்தலத்தில் கொண்டாட திருவருள் கைகூடியிருந்தது. கதிர்காமக் கந்தனின் அருளாடல் தலமாக விளங்கும் கிழக்கிலங்கையில் முருகபத்தியை உலகெலாம் பரப்பும் தொல்தமிழர் விழாவான தைப்பூசத்தைக் கொண்டாடக் கிடைத்துள்ளமை இறைவன் திருவருள் என்றே சொல்லவேண்டும். அனைத்து முருக அடியாரும் சங்கமன்கண்டி மலைக்கு வருகை தந்து தைப்பூச நாயகனாம் முருகப்பெருமான் அருள்பெற்றுய்யுமாறு அன்போடு வேண்டுகிறோம்.

(முற்றும்)

திருச்சிற்றம்பலம்

# தென்னாட்டு நிகழ்வுகள்



தென்னாடு பெருஞ்சிவனிரவு கலைநிகழ்வுகள் (15-02-2025)





தென்னாடு பெருஞ்சிவனிரவு வழிபாடுகள் (15-02-2025)



# தென்னாட்டு நிகழ்வுகள்



தைத் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (01-02-2026)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் அறுபத்து ஏழாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 கும்பம் நல்லோரை மாசித் திங்கள் 19ம் நாள் நிறைமதி அன்று (03-03-2026 செவ்வாய்க்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org